விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 25
ஒலி 321 வள்ளுவர் ஆண்டு 2055 ஐப்பசி 18 திங்கட்கிழமை (04.11.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829


பாராளுமன்ற தேர்தல் 2024
சிவஞானம் சிறீதரன்
தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும்
தர்மமே மறுபடியும் வெல்லும்!
யாழ் தேர்தல் மாவட்டம் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி

# முன்பு ஆட்சி செய்தவர்கள் நாட்டை நாசமாக்கிவிட்டனர்

## நுவரெலியாவில் ஜனாதிபதி அநுர சீற்றம்



(நுவரெலியா)

இந்த நாட்டை ஆட்சி செய்தவர்கள் நாட்டை நாசமாக்கியுள்ளனர் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

## அரச ஊழியர்களுக்கு சம்பளம் அதிகரிக்கப்படும்

### உறுதிபடக் கூறினார் ஜனாதிபதி

(நுவரெலியா)

எமது முதலாவது வரவு செலவுத் திட்டத் தில் அரச ஊழியர்களுக்கான சம்பள அதி 15

## பிரசார நடவடிக்கையில் பாடசாலை ஆசிரியர்கள்

### பெஃப்ரல் அமைப்பு கண்டனம்

(கொழும்பு)

பொதுத் தேர்தலில் வேட்பாளர்களாகப் போட்டியிடும் பாடசாலை ஆசிரியர்கள் 15

## யாழில் விபத்து ஒருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சத்திரச்சந்திப் பகுதியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். 15

## காயங்களுடன் இளைஞன் மீட்பு

### கட்டைக்காட்டில் சம்பவம்

(கரணவாய்)

வடமராட்சி கிழக்கு கட்டைக்காட்டுப் 15

## பாராளுமன்றத் தேர்தல்

### வட மாகாண வாக்காளர்கள் தெரிந்திருக்க வேண்டியவை

14 ஆம் பக்கம் பார்க்க

## 15 நாடுகளுக்கான தூதுவர்களை இடைநிறுத்தியது இலங்கை

(கொழும்பு)

கடந்த அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட 15 உயர்ஸ்தானிகர்கள் மற்றும் தூதுவர்களை மீண்டும் நாட்டுக்கு அழைக்க வெளிவிவகார அமைச்சு தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதியின் பணிப்புரைக்கு அமைய ஜனாதிபதியின் செயலாளரினால் வெளிவிவகார அமைச்சுக்கு விடுக்கப்பட்ட அறிவித்தலின்படி இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. 15

நாடாளுமன்றத் தேர்தல் - 2024
யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்டம்
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி
இளைய தலைமுறையின் எதிர்பார்ப்பு!
ஊழலற்ற தூய கரங்கள்!!
3

சட்டத்தரணி
கேசவன் சயந்தன்
(முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர்)
அறிவு - ஆற்றல் - ஆளுமை
(050)

## வாக்களிப்பதற்கு விசேட விடுமுறை

### தேர்தல்கள் ஆணைக்குழு


(கொழும்பு)

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் அரச மற்றும் தனியார் துறை ஊழியர் 15

## நாட்டில் மழைக்கு வாய்ப்பு

(கொழும்பு)

நாட்டின் பெரும் பாலான பிர தேசங்களில் 15

பாராளுமன்றத் தேர்தல் - 2024
யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்டம்

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ்
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி
'இரு தேசங்கள் ஒரு நாடு'
இலக்கினை அடைய
ஒற்றைத் தலைமையில்
ஓரணியாவோம்!
2
கஜேந்திரகுமார் பொன்னம்பலம்
LLB (Hons) London
Barrister-at-Law (England & Wales)
Attorney-at-Law (Sri Lanka)
தலைவர்,தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி
பொதுச் செயலாளர்,அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ்
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்.
(C-092)

3
ஞானகுணேஸ்வரி
கமலச்செல்வம் (TRD. Spl)
ஆசிரியர்,
முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்
(கோப்பாய்)
தாயகம்
தேசியம்
சுயநிர்ணயம்

9
செல்வராசா கஜேந்திரன் (BBA)
பொதுச் செயலாளர்,தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி.
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்
கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களது சர்வதேச விவகாரக் குழு உறுப்பினர் (2005-2010).
முன்னாள் யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய தலைவர்.
முன்னாள் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை தலைவர்.
முன்னாள் சிரேஸ்ட மாணவர் தலைவர் - மு/ஒட்டுசுட்டான் ம.வி.
உலகத் தமிழினம் தேசிய தலைவனின் பின்னால் அணிதிரண்டு நிற்கிறது என்பதனை உலகறியச் செய்த பொங்குதமிழ் பேரெழுச்சி உழைப்பாளர்களில் ஒருவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# எதிர்வரும் 8 ஆம் திகதி ஆளுநர் முல்லை செல்வார்

வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் எதிர்வரும் 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் மு. ப 10.00 தொடக்கம் மாலை 4.00 வரை பொதுமக்களைச் சந்திக்கவுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த பொதுமக்களின் நலன் கருதி அவர்களின் குறைகளைக் கேட்டறிந்து உரிய தீர்வுகளை விரைவாக வழங்கும் நோக்கத்தில் நடமாடும் சேவையும் இங்கு நடாத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ந-7)

# வைத்தியசாலையில் லொஹான் ரத்வத்த

பதிவுசெய்யப்பட்ட இலக்கத்தகடு இல்லாத சொகுசு கார் ஒன்றை வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த சுகவீனம் காரணமாக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலை ஆணையாளர் காமினி பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

லொஹான் ரத்வத்தவின் மனைவி ஷஷி பிரபாரத்வத்தவுக்குச் சொந்தமான நுகேகொடை, மிரிஹான பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் இருந்து பதிவுசெய்யப்பட்ட இலக்கத்தகடு இல்லாத சொகுசு கார் ஒன்று கடந்த 26ஆம் திகதி மிரிஹான பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து, முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த கண்டி பிரதேசத்தில் வைத்து கடந்த 31ஆம் திகதி கைது செய்யப்பட்ட நிலையில், நுகேகொடை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் அவரை எதிர்வரும் 7ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

அதனையடுத்து, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த சுகவீனம் காரணமாக சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் தற்போது கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக சிறைச்சாலை ஆணையாளர் மேலும் தெரிவித்தார். (ந-7)

# மதஸ்தலங்களின் பாதுகாப்புக்கான இராணுவம் அகற்றப்படமாட்டாது

## பாதுகாப்பு அமைச்சு திட்டவட்டம்

(கொழும்பு)

ஆலயங்கள் உள்ளிட்ட மதவழிபாட்டு ஸ்தலங்களில் இருந்து இராணுவத்தினை விலக்கிக்கொள்ள அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக வெளிவரும் செய்திகளை பாதுகாப்பு அமைச்சு நிராகரித்துள்ளது.

மதஸ்தலங்களின் பாதுகாப்புக்காக அமர்த்தப்பட்ட படையினரை அங்கிருந்து நீக்குவது தொடர்பில் எதுவித முடிவுகளையும் நாம் எடுக்கவில்லை எனவும் வலைத்தளங்களில் வெளியாகும் போலியான செய்திகளை நம்ப வேண்டாம் எனவும் பாதுகாப்பு அமைச்சு கேட்டுள்ளது. (ந-7)




தமிழர் சம உரிமை இயக்கத்தின் தேர்தல் விஞ்ஞாபனம் நேற்று ஞாயிற்றுக்கிழமை (03) யாழ்ப்பாணத்தில் கீரிமலையிலும், வன்னியில் ஒட்டுசுட்டானிலும் சம நேரத்தில் வெளியிடப்பட்டன.

கீரிமலையில் காங்கேசன்துறைத் தொகுதி பாராளுமன்ற வேட்பாளர் பல்கலைக்கழக மாணவி டிபினியா ஜெகதாஸ் தலைமையில் தேர்தல் விஞ்ஞாபனத்தை தமிழர் சம இயக்கத்தின் முதன்மை வேட்பாளர் கலாநிதி தே.தேவானந்த் வெளியிட்டார்

வன்னியில் முதன்மை வேட்பாளர் க.கருணானந்தன் தலைமையில் முல்லைத்தீவு வேட்பாளர் தமிழ்த்தேசியப் போராளி த.யோகானந்தன் தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டார்.

# சின்னமுத்து தடுப்பு வாரம்

சின்னமுத்து அம்மை நோய்க்கான தடுப்பு வாரம் இன்று முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாகச் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

மீண்டும் சின்னமுத்து அம்மை நோய் பரவாமல் அதனைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகள் குறித்து இதன்போது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.

அத்துடன், விசேட தடுப்பூசி செலுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (ந-7)





# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் நாவற்குழி நெய்தல் நகருக்கு அருகாமையில் 132 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

**நிலப்பரப்பு**

- 20 அடிப் பாதையுடன் 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல்.
- அனைத்து விதமான தேவைகளுக்கும் உகந்த இடம்.

**ஒரு பரப்பின் விலை**

- நெய்தல் நகர் பிரதான வீதியை முகப்பாகக் கொண்ட காணித் துண்டுகள் 10 இலட்சம் ரூபாயும்.
- கடற்கரையை (Beach) முகப்பாகக் கொண்ட காணித் துண்டுகள் 10 இலட்சம் ரூபாயும்.
- 20 அடிப் பாதையை முகப்பாகக் கொண்ட காணித் துண்டுகள் அனைத்தும் 9,75000 ரூபாய் மட்டுமே.
- தரகர் தேவையில்லை.
- **பார்வையிடும் நேரம்**
  காலை 6 மணி தொடக்கம்
  மாலை 6 மணி வரை

தொடர்புகளுக்கு : ஜெயம் (2553)

077 814 7389, 077 986 5457


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org







# தரமற்ற பிளாஸ்ரிக் பொருட்களால்

# புற்றுநோய் ஏற்படும் அபாயம்

## உலக புற்றுநோய் சங்கம்

**(கொழும்பு)**

**சிறுவர்கள் பயன்படுத்தும் மதிய உணவு பெட்டிகள் மற்றும் தண்ணீர் போத்தல்களில் 75 வீதமானவை தரமற்றவை என பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.**

இன்றும் தரமில்லாத இவ்வாறான பொருட்கள் உள்நாட்டு சந்தையில் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த விடயங்களை பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த சங்கத்தின் தலைவர், இந்த பொருட்கள் சிறுவர்களுக்கு பாரிய ஆபத்தை விளைவிப்பதாக தெரிவித்தார்.

சுகாதார அதிகாரிகளின் கூற்றுப்படி, உணவு மற்றும் தண்ணீருக்குப் பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் பொருட்களை வாங்கும் போது, அதன் கீழ்ப்பகுதியில் BPA அல்லது கீழே 5 என்ற எண் எழுதப்பட்டுள்ளதா என்பதை நீங்கள் கவனிக்க வேண்டும்.

இல்லையெனில், பொருட்களில் கண்ணாடியுடன் ஒரு முட் கரண்டியின் குறி இருக்கிறதா என்று சரிபார்க்கவும். இந்த இரண்டு அறிகுறிகளும் இருந்தால், இது போன்ற சாதனங்கள் உங்கள் குழந்தைக்கும் உங்க ளுக்கும் பயன்படுத்த ஏற்றது.

சந்தையில் பல்வேறு இலக்கங்களுடன் விற்பனை செய்யப்படும் கவர்ச்சிகரமான மதிய உணவுப் பெட்டிகள் மற்றும் தண்ணீர் போத்தல்கள் தொடர்பில் எதிர் காலத்தில் சோதனைகள் தீவிரப் படுத்தப்படும் என உபுல் ரோஹன தெரிவித்துள்ளார்.

1980 ஆம் ஆண்டின் உணவுச் சட்டம் எண் 26 இன் கீழ் வழக்குப் பதிவு செய்யலாம். எதிர்காலத்தில் விசேட கவனம் செலுத்தி சோதனைகளை மேற்கொள்வோம் என அவர் தெரிவித்துள்ளார்.

தரமற்ற பிளாஸ்ரிக் உபகரணங்களைப் பயன்படுத்துவதால் குழந்தைகளின் உயிருக்கு கடுமையான அச்சுறுத்தல் இருப்பதாக உலக புற்றுநோய் சங்கம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவம்பர் மாத இராசி பலன்கள்-2024

## காரிய வெற்றி கிடைக்கும்



**கிரகநிலை** - தனவாக்கு ஸ்தானத்தில் செவ்வாய் - சுக ஸ்தானத்தில் கேது - பஞ்சம ஸ்தானத்தில் சூரியன் - ரண ருண ரோக ஸ்தானத்தில் புதன், சுக்கிரன் - பாக்கிய ஸ்தானத்தில் சனி (வ) - தொழில் ஸ்தானத்தில் ராகு - அயன சயன போக ஸ்தானத்தில் குரு(வ) என கிரகநிலை உள்ளது.

**கிரகமாற்றம்:** 05.11.2024 அன்று பாக்கிய ஸ்தானத்தில் சனி வக்கிரம் நிவர்த்தி ஆகிறார். 08.11.2024 அன்று ரண ருண ரோக ஸ்தானத்தில் இருந்து சுக்கிரன் களத்திர ஸ்தானத்திற்கு மாறுகிறார். 13.11.2024 அன்று ரண ருண ரோக ஸ்தானத்தில் புதன்வக்கிரம்ஆரம்பிக்கிறார். 16.11.2024 அன்று பஞ்சம ஸ்தானத் தில் இருந்து சூரியன் ரண ருண ரோக ஸ்தானத் திற்கு மாறுகிறார்.

**பலன்கள்:** கிடைத்த வாய்ப்பை தவறவிடாமல் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும் திறமை உடைய மிதுன இராசியினரே! இந்த மாதம் வழக்கு சம் பந்தமான விடயங்களில் சாதகமான பலன் கிடைக்கும். பயணங்கள் செல்ல நேரிடலாம். மனதிருப்தியுடன் செய லாற்றுவீர்கள். புத்திசாதுரியம் மூலம் காரிய வெற்றி கிடைக்கும். கொடுத்த வாக்கை நிறைவேற்றுவதன் மூலம் மற்றவர்களிடம் மதிப்பு கூடும். பாராட்டு கிடைக்கும். உடல்சோர்வு உண்டாகும். எனினும் உற்சாகத்துடன் காணப்படு வீர்கள்.

தொழில் வியாபாரம் முன்னேற்றம் காண புதிய திட்டங்களைத் தீட்டுவீர்கள். புதிய ஓடர்கள் கிடைக்க கூடிய சூழ் நிலை காணப்படும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் உற்சாகமாக செயற்பட்டு வேலைகளை உடனுக்குடன் செய்து முடிப்பார்கள். புதிய பதவி அல்லது பொறுப்புகள் கிடைக்கும்.

கணவன், மனைவிக் கிடையே நெருக்கம் அதிகரிக்கும். குடும்பத்துடன் விருந்து, கேளிக்கை நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் சூழ்நிலை வரும். குழந்தைகள் உற்சாகமாக காணப்படு

காரியங்களை செய்து சாதகமான பலன் பெறுவீர்கள். பயணம் செல்ல நேரலாம்.

அரசியல்வாதிகள் கட்சித் தலைமையின் நம்பிக்கையைப் பெறுவார்கள். உங்கள் செயற்பாடுகளை மேலிடம் உற்று நோக்கும். கட்சியில் உங்களைப் பற்றிய சலசலப்பு நீங்கும். தொண்டர்கள் உங்கள் சொற்படி நடந்து உங்கள் மனதில் இடம்பிடிப்பார்கள்.

கலைத்துறையினருக்கு எதிர்பார்த்த




ஒப்பந்தம் கையெழுத்தாகும். வருமானம் உயர வழி பிறக்கும். விமர்சனங் களையும் தாண்டி முன்னேறுவீர்கள். வேலைப்பளு காரணமாக வெளியில் தங்க நேரலாம். மாணவர்கள் பாடங்களை கவனமாக படித்துக் கூடுதல் மதிப்பெண் பெறு வீர்கள். பொறுப்புகள் அதிகரிக்கும்.

**மிருகசீரிடம் 3, 4ஆம் பாதங்கள்:** இந்த மாதம் தொழில், வியாபாரத்தை மாற்றலாமா என்ற எண்ணம் உண் டாகும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் இடமாற்றம், பதவி உயர்வு கிடைக்க பெறுவார்கள். தொழில், வியாபாரத்தில் வரவேண்டிய பாக்கிகள் வசூலாகும். வாகனங்கள் மூலம் இலாபம் கிடைக்கும். பொருட்களை வெளியூர் களுக்கு அனுப்பும் போது கவனம் தேவை.

**திருவாதிரை:** இந்த மாதம் குடும்ப உறுப்பினர்களுக்கு தேவையான பொருட்களை வாங்குவீர்கள். கணவன், மனைவிக்கிடையே இருந்து வந்த கருத்து வேற்றுமை குறையும். உங்கள் பற்றி யாராவது வீண் அவதூறு பேசினால் கண்டு கொள்ளாமல் ஒதுங்கி விடுவது நல்லது. விருந்து, கேளிக்கை நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீகள்.

**புனர்பூசம் 1, 2, 3ஆம் பாதங்கள்:** இந்த மாதம் எந்த ஒரு வேலையையும் மனதிருப்தியுடன் செய்வீர்கள். சாமர்த் தியமான பேச்சின் மூலம் காரிய வெற்றி உண்டாகும். பணவரத்து கூடும். கடுமையான முயற்சிகள் மேற்கொள் வது குறையும். வீண்வாக்கு வாதங் களை தவிர்ப்பது நல்லது. எதிர்பாராத செலவு உண்டாகும்.

**பரிகாரம்:** பெருமாளை புதன் கிழமைகளில் அர்ச்சனை செய்து வணங்க திருமண தடை நீங்கும். குடும்பத்தில் சுபீட்சம் உண்டாகும்.

**அதிஷ்ட கிழமைகள்:** புதன், வியாழன்

**சந்திராஷ்டம தினங்கள்:** 8, 9

**அதிஷ்ட தினங்கள்:** 1, 2, 28, 29

## பணவரவு எதிர்பார்த்தபடி இருக்கும்



**கிரகநிலை** - இராசியில் செவ்வாய் - தைரிய வீரிய ஸ்தானத்தில் கேது - சுக ஸ்தானத்தில் சூரியன் - பஞ்சம பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் புதன், சுக் கிரன் - அஷ்டம ஸ்தானத்தில் சனி (வ) - பாக்கிய ஸ்தானத்தில் ராகு - லாப ஸ்தானத்தில் குரு(வ) என கிரகநிலை உள்ளது.

**கிரகமாற்றம்:** 05.11.2024 அன்று அஷ்டம ஸ்தானத்தில் சனி வக்கிரம் நிவர்த்தி ஆகிறார். 08.11.2024 அன்று பஞ்சம ஸ்தானத் தில் இருந்து சுக்கிரன் ரண ருண ரோக ஸ்தானத்திற்கு மாறுகிறார்.13.11.2024 அன்று பஞ்சம ஸ்தானத்தில் புதன் வக்கிரம் ஆரம்பிக்கிறார். 16.11.2024 அன்று சுக ஸ்தானத்தில் இருந்து சூரி யன் பஞ்சம ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

**பலன்கள்:** அடுத்தவர் செய்யும் இடையூறுகளையும் உங்களுக்கு சாத கமாகப் பயன்படுத்தும் சாமர்த்தியம் உடைய கடக இராசியினரே! இந்த மாதம் எடுத்த காரியத்தை எப்படியும் செய்து முடித்து விடுவீர்கள். சுபசெலவுகள் ஏற்படும். வேலை காரணமாக வீட்டை விட்டு வெளியில் தங்க நேரலாம். திட்டமிடுவதில் பின்னடைவு ஏற்படும். பணவரவு எதிர்பார்த்தபடி இருக்கும். பெரியோர் நேசம் கிடைக்கும். வாகன யோகம் உண்டாகும்.

தொழில் வியாபாரம் வாக்கு வன்மையால் சிறப்பாக நடக்கும். பழைய பாக்கிகள் வசூலாகலாம். புதிய வாடிக் கையாளர்கள் கிடைப்பார்கள். உத்தி யோகம் தொடர்பான பயணங்கள் செல்ல நேரலாம். உத்தியோகஸ்தர்கள் புத்தி சாதுரியத்தால் மேலதிகாரிகள் கொடுத்த வேலையை சிறப்பாக செய்து முடிப் பார்கள்.

குடும்பத்தில் இருந்த குழப்பம் நீங் கும். கணவன், மனைவிக்கிடையே இருந்த மனவருத்தம் நீங்கும். பிள் ளைகளுக்கு தேவையான பொருட் களை வாங்கி கொடுப்பீர்கள். பெண் களுக்கு காரியங்களில் இருந்த பின்ன டைவு நீங்கும். எதிர்பார்த்த பணவரவு இருக்கும்.

அரசியல்வாதிகள் கட்சி இரகசியங் களை வெளியிட வேண்டாம். தொகுதி யில் மதிப்பு கூடும்.

கலைத்துறையினர் யதார்த்த மான படைப்புகளால் அனைவரின் கவனத்தையும் ஈர்ப்பார்கள். வேற்று மொழி வாய்ப்புகளால் புகழடைவார்கள். சம்பளப் பாக்கி கைக்கு வரும். மாண வர்களுக்கு புத்திசாதுரியம் வெளிப்படும்.




கல்வியில் இருந்த தொய்வு நீங்கும்.

**புனர்பூசம் 4ஆம் பாதம்:** இந்த மாதம் உடற்சோர்வு உண்டாகலாம். பூர்வீக சொத்துக்கள் மூலம் வரும் வருமானம் தாமதப்படும். திருமணம் தொடர்பான முயற்சிகளில் சாதகமான நிலை இருக்கும். தொழில், வியாபாரம் தொடர்பான காரியங்களில் எதிர்பாராத தடை ஏற்பட்டு நீங்கும். பணவரத்து அதிகரிக்கும். எதிர்பார்த்த பண உதவி வந்து சேரும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேலதிகாரிகளை அனுசரித்து செல்வது நல்லது.

**பூசம்:** இந்த மாதம் அலுவலகம் தொடர்பான பணிகள் தாமதப்படும். எதிலும் கவனம் தேவை. குடும்பத்தில் இருப்பவர்களுடன் வீண் வாக்கு வாதங்களை தவிர்த்து சாதாரணமாக பேசுவது நல்லது. வாழ்க்கை துணையுடன் இருந்த மனஸ்தாபங்கள் விலகும். நண்பர்கள், உறவினர்கள் வருகை இருக்கும். பிள்ளைகள் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**ஆயில்யம்:** இந்த மாதம் வீண் வாக்கு வாதங்களை தவிர்ப்பது நல்லது. கடும் முயற்சிகள் பலன் தரும். செலவு அதிகரிக்கும். சாதகமான சூழ்நிலை காணப்படும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். மற்றவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணம் உண் டாகும். விட்டு சென்ற நண்பர் மீண்டும் வந்து சேர்வார். அதனால் மகிழ்ச்சி உண்டாகும்.

**பரிகாரம்:** அம்மனுக்கு அரளிப்பூ அர்ப்பணித்து அர்ச்சனை செய்து வணங்க எல்லாக் காரியங்களும் கைகூடும். எதிர்ப்புகள் நீங்கும்.

**அதிஷ்ட கிழமைகள்:** ஞாயிறு, வியாழன், வெள்ளி

**சந்திராஷ்டம தினங்கள்:** 10, 11

**அதிஷ்ட தினங்கள்:** 3, 4, 30

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலமைப்பரிசில் பரீட்சை

# விடைத்தாள் திருத்தும் பணிகள் தாமதம்

(கொழும்பு)
தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் விடைத்தாள்களைத் திருத்தும் பணிகள் தாமதமாவதால் எதிர்காலத்தில் நடைபெறவுள்ள பரீட்சைகளுக்குப் பாதிப்பு ஏற்படலாம் என இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

எனவே கல்வித்துறை அதிகாரிகள் இது தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் பிரியந்த பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கல்வி அமைச்சின் செயலாளர் திலகா ஜயசுந்தர தெரிவிக்கையில், தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையின் வினாத்தாள் கசியப்பட்ட சம்பவம் தொடர்பில் உயர் நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் விடைத்தாள்களைத் திருத்தும் பணிகளை ஆரம்பிக்க முடியவில்லை.

எவ்வாறிருப்பினும், இது தொடர்பில் நீதிமன்றில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகக் கல்வி அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-8)

# நடை பயணத்தை நிறைவு செய்த டினோஜனுக்கு வரவேற்பு



(தருமபுரம்)
39 நாட்களாக இலங்கையை நடை பயணம் மூலம் சுற்றி வந்த கிளிநொச்சி மகா வித்தியாலய (11வயது) தரம் 6 இல் கல்வி கற்கும் மாணவன் மு.டினோஜன் தனது பயணத்தை நேற்று நிறைவு செய்தார்.

கிளிநொச்சி கோணாவில் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் தரம் 6 மாணவன் முரளீதரன் டினோஜன் என்ற மாணவன் சாதனை படைக்கும் நோக்குடன் கடந்த ஒன்பதாம் மாதம் 25 ஆம் திகதி தனது தந்தையுடன் கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்திலிருந்து தனது நடை பயணத்தை ஆரம்பித்தார்.

இவர் இலங்கை பூராகவும் 39 நாட்களில் சுற்றி வந்து ஆரம்பித்த இடமான கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்தில் நிறைவு செய்தார்.

குறித்த சிறுவனையும் தந்தையையும் விளையாட்டுக் கழகத்தினரும் மக்களும் சேர்ந்து வரவேற்றனர். (நி-8-316)









# இராசிபலன்

04.11.2024
ஐப்பசி 18, திங்கட்கிழமை
திருதியை முன்னிரவு 10.11 மணிவரை

அனுசம் முற்பகல் 7.50 மணிவரை
சுபநேரம் -12.04-1.34 மணிவரை
இராகுகாலம் -7.34-9.04 மணிவரை

சந்திராஷ்டமம்: பரணி

வளவன்



உடல் நலனில் கவனம் செலுத்தும் சூழ்நிலை ஏற்படலாம், விரயங்கள் மேலோங்கும் நாள், குடும்பத்தினரிடம் கோபமாக பேசிவிட்டு பின்னர் மனம் வருந்தும் சூழ்நிலை ஏற்படலாம்.



பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், மற்றவர்கள் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.



பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், தேவைகள் பூர்த்தியாகும் வாய்ப்புண்டு, செய்தொழில் மேன்மையுண்டு, மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.



வருங்கால நலன் கருதி சேமிக்க முற்படுவீர்கள், முன்னேற்றத்திற்கு உதவிய சிலரைச் சந்தித்து மகிழ்வீர்கள், இலாபகரமான நாள், பொது வாழ்வில் கௌரவம் கூடும்.



நம்பி வந்தவர்களுக்கு கைகொடுத்து உதவுவீர்கள், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், கௌரவமான நாள்.



வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள்.



வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், குடும்பத்தில் சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரலாம், வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள்.



அன்பு நண்பர்களின் ஆதரவு கிடைக்கும், திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள்.



கடன்கள் தீர வழிவகை செய்வீர்கள், வருமானம் பெருக வழி சமைப்பீர்கள், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள்.



உயர்வான சிந்தனைகள் மனதில் தோன்றும், செயற்பாடுகளில் முன்னேற்றம் காண்பீர்கள், நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், போசன சுகமுண்டு.



கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும், தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், உடல் நலனில் அக்கறை காட்ட வேண்டிய நாள்.



மனக்குழப்பம் தீர்ந்து மகிழ்ச்சி கூடும் நாள், எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், பயணங்களால் பலனுண்டு.

**எவ்வளவு பெரிய கோழையையும் வீரனாக மாற்றும் சக்தி கொண்டது காதல்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூரில் கந்தசஷ்டி உற்சவம்



(யாழ்ப்பாணம்)

கந்தசஷ்டி விரதம் நேற்று முன்தினம் சனிக் கிழமை ஆரம்பமாகியுள்ள நிலையில் நல்லூர் கந்த சுவாமி ஆலயத்திலும் விசேட பூஜை வழிபாடுகள் நடைபெற்றன.

கந்தசஷ்டி விரத நாட்களில் தினமும் காலை 9 மணிக்கு சிவலிங்க பூஜையும் 10 மணிக்கு காலசந்தி பூஜையும் , 10.15 மணிக்கு வசந்தமண்டப பூஜையும் நடைபெறுகின்றது.

சாயரட்சை பூஜை மாலை 3.45 மணிக்கும் , 2ஆம் காலசந்தி பூஜை 4 மணிக்கும் தொடர்ந்து 4.15 மணிக்கு வசந்தமண்டப பூஜையும் இடம்பெற்று முருகப்பெருமான் வெளிவீதியுலா வலம் வந்து பக்தர்களுக்கு அருட்காட்சி அளிப்பார்.


எதிர்வரும் 7ஆம் திகதி வியாழக்கிழமை மாலை சூரசம்ஹார உற்சவமும் மறுநாள் வெள்ளிக் கிழமை மாலை திருக்கல்யாண உற்சவமும் நடை பெற வுள்ளது. (நி-8-33)

# 10 மாதத்தில் 86 தடம்புரள்வு


(கொழும்பு)

இந்த ஆண்டின் இது வரையான காலப் பகுதியில் நாட்டில் மொத்தம் 86 ரயில் தடம்புரள்வு சம்பவம் பதிவாகியுள்ளது.

2023 ஆம் ஆண்டில் 139 ரயில் தடம்புரள்வு சம்பவங்களும், .2022 இல் 132 ரயில் தடம்புரள்வு சம்பவங்களும் பதிவானதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (நி-8)





வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் பூநகரி பிரதேச செயலகமும், கலாசார பேரவையும் இணைந்து பூந்துணர் நறவம்-12 பிரதேச மலர் வெளியீடும் கலை நிகழ்வுகளும் கடந்த செவ்வாய்க்கிழமை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.



# எனது 33 ஆண்டுகள் ஆன்மீகப் போராட்டப் பாதையிலே...

**வழக்காளி** **இறை நீதிமன்றம் நீதியரசர்** **எதிராளி சிறிலங்கா அரசு**

சோழியூரான்(சந்ததிப் பூசகர்) பறாளாய் ஈசுர விநாயகர்

ஈசுர விநாயகரிடம் மனுத்தாக்கல் செய்தமை (05.11.1991) அம்மனுவின் அன்றைய பிரதான கோரிக்கை கொழும்பு அரசியலில் சூறாவளி ஏற்பட்டு பூகம்பமாக வெடிக்க வேண்டும்.

நாளை(05.11.2024) ஆன்மீகப் போராட்ட 33 ஆம் வருட பூர்த்தி விசேட பூஜை வழிபாடுகள்.

காலம்:- 05.11.2024 செவ்வாய் விநாய சதுர்த்தியன்று

நேரம்:- பி.ப 3.00 மணியளவில் ஆரம்பமாகி விசேட அபிடேக பூஜை வழிபாடுகளுடன் சுவாமி வீதி உலா நடைபெறும்.

**சோழியபுரம் பத்ம வெளியீடு**

என் இனிய நெஞ்சங்களே!

விநாயகப் பெருமானின் உருவம் விலங்கு, பூதம் , மனிதர்,தேவர் என்ற நான்கு கூறுகளும் இணைந்தது. யானைமுகம் விலங்கையும் பருத்த வயிறு பூதத்தையும் நான்கு கரங்கள் தேவ வடிவத்தையும் மற்றவை மனித வடிவத்தையும் காட்டுகின்றன. யானைத் தலை அஃறிணையையும் தெய்வ சரீரம் உயர்திணையையும் உணர்த்துகின்றன. இப்படிப் பல வடிவம் கொண்டவர் தான் விநாயகப் பெருமான்.

**பஞ்சமுக விநாயகர்**

பிள்ளையாரின் உருவங்களில் மிகச் சிறந்ததாகக் கருதப்படுவது பஞ்சமுகப் பிள்ளையாரின் தோற்றமே பஞ்சமுக தோற்றமே. பஞ்சமுக தோற்றமாக வந்ததின் காரணம் அசுரர்கள் மறைந்து மறைந்து நின்று போராடத் தொடங்கிவிட்டார்கள்.

அவர்களை அழிப்பதற்கு எல்லாத் திசைகளையும் ஒரேநேரத்தில் பார்ப்பதற்காகத் தோன்றிய தோற்றம் தான் பஞ்சமுக விநாயகர். மதங் கொண்ட யானைத் தோற்றம் தான் ஈசுர விநாயகரின் ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் பஞ்சமுக விநாயகர்.

**மூசிகவாகனம் எதற்கு?**

கஜமுகா அசுரனைக் கொன்று அவனை மூசிக வாகனமாக்கி தனது வாகனமாக ஏற்றுக் கொண்டார். பெரிய விநாயகருக்கு சிறிய மூஷிக வாகனம் எப்படித் தாங்கும் என்று கேட்பவர்களும் உண்டு.விநாயகப் பெருமான் ஞானத்தின் உச்சி. ஞானம் பெரியது அதற்கு எடைகிடையாது இதை உணர்த்துவதே பெரிய வடிவிலான விநாயருக்கு சிறிய வடிவிலான மூஷிக வாகனம். அதாவது ஞானம் ஆசையை அடக்கி வைத்திருப்பதையே இத் தத்துவம் குறிக்கின்றது.

**பிள்ளையாருக்கு யானை முகமும் மனித உடலும் உள்ளது. ஒவ்வொரு அங்கத்திற்கும் காரண காரியம் உண்டு.**

**திருவடி**

மனிதன் தனது மாயையும் ஆணவத்தையும் அகற்றி தான் யார் என்று தன்னைத் தான் உணர்ந்து கொள்ளும் வாய்ப்பினை அளிப்பதே அவனுக்குரிய ஞானம். இப்படிப்பட்ட வாய்ப்பை உடையவன் எவ்வித துன்பமும் இல்லாமல் இருக்கின்றான்.

அந்த ஞானத்தையே விநாயகரின் திருவடி குறிக்கின்றது.

அதாவது அவரது பாதத்தைப் பணிந்தால் இந்த ஞானம் தானாகவே கிடைக்கும் செய்கின்ற காரியங்களும் இலகுவாக நல்லதாக அமையும்.

**வயிறு**

இந்த உலகமே அவருக்குள் அடக்கம் என்பதாகும்.ஆகாயம் உட்பட எல்லாப் பொருள்களும் [illegible] விநாயகர் தனது வயிறு மூலம் காட்டுகின்றார்.

எனவே விஸ்வரூப தர்சனராகக் கட்சி தருகின்றார்.

**ஐந்து கரங்கள்**

ஒருகரம் பாசக்கயிறை ஏந்திப் படைக்கும் தொழிலைச் செய்கிறது. இரண்டாவது கரம் அங்குசம் வைத்துக் கொண்டு அழிக்கும் தொழிலைச் செய்கின்றது. மூன்றாவது கரம் மோதகத்தை வைத்துக் கொண்டு எல்லா உயிரினங்களுக்கும் உணவை வழங்குகின்றார்.

நாலாவது கரம் ஞானக்கரம் தன்னை நாடி வரும் உயிர்களுக்கு முத்தியைக் கொடுக்கின்றார்.ஐந்தாவது தும்பிக்கை மூலம் எல்லா உயிர்களுக்கும் இன்பத்தை வழங்குகின்றார்.

**செவிகள்**

விநாயகப் பெருமான் யானைமுகம் என்பதால் பெரிய செவி இதன் தத்துவம் விநாயகர் உலகில் நடக்கும் எல்லா விடயங்களும் தெரிந்தவர் என்பது தனது பெரிய செவிகளால் அறிகிறார் என்று அர்த்தம்.

**யானைமுகம்**

உலகிலேயே மிகப் பெரிய விலங்கு யானை அது வலிமை மிக்கது. எவ்வளவு பெரிய பாரத்தையும் தூக்கும் சுமக்கும்.பெரும்படையையும் வெற்றி காணும்.தன்னை யாராவது துன்புறுத்தினால் காலம் வரும் வரை காத்திருந்து எதிரியை அழிக்கும் தனக்கு உணவு கொடுக்கும் மக்களின் தலை மீது தும்பிக்கையை வைத்து அன்பு செலுத்தி ஆசீர்வதிக்கும். இப்படிப்பட்ட அனைத்துக்குணமும் உடையவர் தான் விநாயகப் பெருமான். யானையின் மதத்தை இசை மூலம் அடக்கலாம் என்றனர்.

விநாயகனும் இசைப் பிரியன் தனக்கு மேல் ஒரு தலைவனும் இல்லாதவர்.

எனவே விநாயகப் பெருமான் தனது தோற்றத்தின் மூலம் எல்லோருக்கும் உணர்த்திக் கொண்டு அருள் பாலித்துக் கொண்டிருக்கின்றார் என்பதை உணர்வோமாக.

வழிபாடுகளில் விநாயகர் வழிபாடு தான் மிகவும் எளிமையானது.

பிள்ளையாரைக் கைதேர்ந்த சிற்பிதான் செய்ய வேண்டும் என்பது இல்லை. சாணத்தையோ மஞ்சளையோ பிடித்து வைத்தால் அது பிள்ளையார். எனவே தான் பிடித்து வைத்தால் பிள்ளையார் என்று பழமொழி.

பிள்ளையாருக்கு ஆலயம் அமைப்பது மிகவும் எளிது. மற்றத் தெய்வங்களுக்கு இன்ன இடங்களில் இன்ன வகையில் தான் கோவில் எடுக்க வேண்டும் என்று ஆகம விதி உண்டு.

ஆனால் பிள்ளையாருக்கு எங்கு வேண்டுமானாலும் கோயில் அமைக்கலாம் என்பதை அறியத்தருகின்றோம்.

அதாவது அரச மரத்தடி ஆலமரத்தடி தெரு ஓரமாக ஆற்றங்கரை, குளக்கரை இப்படி எந்த இடத்திலும் கோயில் அமைக்கலாம் என்பதை அறியத்தருகின்றேன்.பறாளாயில் பள்ளி கொண்டுள்ள சர்வ வல்லமை கொண்ட ஈசுர விநாயகரை வணங்குங்கள் சதா நினையுங்கள் அவர் திருப்பாதம் போற்றி! போற்றி! போற்றி!!

**"பார் தெரியுது பறாளாயான் பதி" பக்தர் குறைதீர்க்கும் சந்நிதி"**

**சோழியூரான் பிறைசூடிக்குரு**
[ஆன்மீகவாதியும் ஓய்வுநிலை ஆசிரியரும்,பரம்பரைப் பரிபாலகரும்]

(சி-2554)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுபவம் வாய்ந்தவர்கள் பாராளுமன்றுக்கு அவசியம்

## ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

அனுபவம் வாய்ந்த நபர்களை பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்ய வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்துள்ளார்.

அனுபவம் வாய்ந்த தலைமைத்துவம் இல்லாமல் இலங்கை மீண்டும் நெருக்கடிக்கு ஆளாகும் அபாயம் இருப்பதாகவும் அவர் எச்சரித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகவியலாளர்களிடம் உரையாற்றிய அவர், தற்போதைய அரசாங்கத்தில் குறிப்பிடத்தக்க அனுபவமுள்ள உறுப்பினர்கள் இல்லை.

நான் முன்பு பாராளுமன்றத்தில் இருந்தேன், இப்போது எங்கள் குழுவிலிருந்து ஒரு புதிய அணியை உருவாக்க வேண்டும் என்று நான் நம்புகிறேன். இவர்கள் மட்டுமே தற்போது நாட்டில் அனுபவம் வாய்ந்தவர்கள்.

தனது குழு பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்பதில் முக்கிய பங்கு வகித்துள்ளது.

புதிய பாராளுமன்றத்தில் மூத்த உறுப்பினர்கள் இல்லாதது ஆபத்தை ஏற்படுத்தலாம் என்றும் அவர் இதன் போது குறிப்பிட்டார். (நி-8)

# வாகன இலக்கத் தகடு விநியோகம் இடைநிறுத்தம்

(கொழும்பு)

வாகன இலக்கத் தகடு அச்சிடும் நிறுவனத்துக்கு பணம் கொடுப்பத்தில் தாமதம் ஏற்பட்டுள்ளமையினால், வாகன இலக்கத் தகடு விநியோகிக்கும் பணி தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

உரிய கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட உள்ளதாக மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் நிஷாந்த வீரசிங்க தெரிவித்துள்ளார்.

மேலும் வாகன உரிமையாளர்களுக்கு வாகன இலக்கத் தகடு வழங்கப்படாத காலப் பகுதியில் பதிவு செய்யப்பட்ட வாகன எண்ணை காகிதத்தில் அச்சிட்டு காட்சிப்படுத்த தற்காலிக அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (நி-8)

## INVITATION FOR BIDS
## TEACHING HOSPITAL, JAFFNA

The Chairman of the Regional Procurement committee, Teaching Hospital, Jaffna, invite sealed bids from eligible and qualified bidders for the construction works in the schedule below.


| | Work/Service Details | Non refundable Deposit (Rs.) (Bid fee) | Security Deposit (Rs.) | Validity Period of Bid Security (Days) | Approximate BOQ of the work (Rs. In million) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|---|---|---|
| 1. | Construction of lift room & Installation of lift machine at NTS lecture Hall Building | 5000.00 | 376,000.00 | 91 | 18.81 | C6 |
| 2. | Construction of lift room & Installation of lift machine at NICU Building | 5000.00 | 325,000.00 | 91 | 16.23 | C6 |

1. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).
2. To be eligibel for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of building Construction for grade given in the schedule or above with the institute for Construction, Training and Development (ICTAD).
3. Interested bidders can inspect bid forms at the Residence Engineer's Office, CECB, Jaffna during office hours, if necessary.
4. A complete set of Bidding Documents in English Language may be purchased by Interested Bidders From Director, Teaching Hospital, Jaffna upon producing valid registration book and receipt for the cash payment for the bid fee from 05.11.2024 up to 20.11.2024 during office hours. The payment shall be made to the Shroff's Office, Teaching Hospital, Jaffna.
5. Sealed bids shall be delivered to the address below at or before 10.00 hrs on 21.11.2024, late bids will be rejected. Bids will be open at Director's Office, Teaching Hospital, Jaffna soon after closing in the presence of bidders or their representatives who choose to attend.
6. Pre-Bid Meeting will be held on 14.11.2024 (Tuesday) at 11.00 am, at Director Office, Teaching Hospital Jaffna.

**Director (Chairman),**
**Regional Procurement Committee,**
**Teaching Hospital, Jaffna.**

(c-1513)

## விற்பனைக்கு




பருத்தித்துறை நகரில் கடை விற்பனைக்கு


பார்வையிடும் நேரம்
12.00-1.00 மணிவரை
தொடர்பு கொள்ளும் நேரம்

தரகர் தேவையில்லை

தொடர்பு:- 077 344 3034

(2536)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையில்
ஆசிரியராக கடமையாற்றும்
திருமதி.ஜெயதர்சினி சுகந்தன்
அவர்களின் தந்தையார்
திரு. **கணபதிப்பிள்ளை இராசேந்திரம்**
அவர்கள் 01.11.2024 அன்று
இறைபதம் அடைந்துவிட்டார்.
அன்னாரின் பிரிவால் துயருறும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களை தெரிவிப்பதுடன்
அவரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/இனுவில் இந்துக் கல்லூரி.

(c-1514)

## 5 ஆம் ஆண்டு நினைவில் உம் நினைவுகள் சுமந்து



தோற்றம் 19.09.1981

மறைவு 30.10.2019

**திருமதி. பிரதீப் தர்சினி**

திதி: பூர்வபக்க திருதியை

வசந்தங்கள் சூழ்ந்து வரமென்று நாம் வாழ்ந்த
உறவென்ற சொந்தத்தில்
உயிர்ப்பாகச் சிரித்த எங்கள் வானத்து நிலவே...
நீ... மறைந்தின்று ஆண்டு ஐந்து ஆனதுவோ...
இருள் சூழ்ந்து மனம் நொந்து
கண்ணீரில் நிதம் இங்கு நாம்
ஒளியாக மீண்டும் நீ
உயிர்ப்போடு வாராயோ
வழி மீது விழி வைத்து உன் உறவுகள் நாம்...

நாகநாதன் வீதி,
கொடிகாமம்.

குடும்பத்தினர்.

(C-1512)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேலின் ஏவுகணை
# 50 சிறுவர்கள் உ

(ஜெருசலேம்)

**வடக்கு காசாவில் உள்ள இஸ்ரேல் நேற்றிரவு நடத்திய இரண்டு ஏவுகணைத் தாக்குதல்களில் 50 சிறுவர்கள் உள்ளிட்ட 84 பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.**

அதேநேரம், வடகிழக்கு லெபனானில் சுமார் 10 வான் வழித் தாக்குதல்களை இஸ்ரேல் நடத்தியுள்ளது.

அத்துடன் லெபனான் தலைநகர் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் கடந்த 24 மணித்தியாலங்களில் 45 பேர் கொல்லப்பட்டதாகவும் லெபனான் அரசாங்கம் அறிவித்துள்ளது.

இதேவேளை வடக்கு இஸ்ரேல் பகுதியில் ஹிஸ்புல்லா அமைப்பு நடத்திய தாக்குதலில் 7 பேர் கொல்லப்பட்டனர்.

அவர்களில் 4 வெளிநாட்டுப் பிரஜைகளும் அடங்குவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-8)

# 19 இந்திய நிறுவனங்களுக்கு அமெரிக்கா பொருளாதாரத் தடை


(வோஷிங்டன்)

உக்ரைன் மீது தாக்குதல் நடத்தி வரும் ரஷ்யாவுக்கு உதவியதாக 19 இந்திய தனியார் நிறுவனங்கள் மற்றும் 2 இந்தியர்கள் மீது அமெரிக்கா பொருளாதார தடை விதித்துள்ளது.

உக்ரைனில் ரஷ்யாவின் போர் முயற்சிகளுக்கு உதவியதற்காக 10 இற்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து 19 இந்திய நிறுவனங்கள் உட்பட சுமார் 400 நிறுவனங்கள் மற்றும் தனி நபர்கள் மீது அமெரிக்கா பொருளாதாரத் தடை விதித்துள்ளது.

120 இற்கும் மேற்பட்ட தனிநபர்கள் மற்றும் நிறுவனங்கள் மீது வெளியுறவுத்துறை தடைகளை விதித்துள்ள அதே நேரத்தில் கருவூலத்துறை 270 இற்கும் மேற்பட்ட தனி நபர்கள் மற்றும் நிறுவனங்கள் மீது தடை விதித்துள் ளது.

வர்த்தகத்துறை தடை பட்டியலில் 40 நிறுவனங்கள் உள்ளன என அமெரிக்க வெளியுறவுத்துறை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-8)



# தகுந்த பதிலடி கொடுக்கப்படும் எச்சரித்த ஈரான் தலைவர்


(டெஹ்ரான்)

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் அமைப்பினர் இடையிலான போர் ஓராண்டை கடந்து நீடித்து வருகிறது. ஹமாஸ்க்கு ஆதரவாக லெபனானில் செயற்பட்டு வரும் ஹிஸ்புல்லா அமைப்பும் இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தி வருகிறது.

ஈராக்கில் இருந்து இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்த ஈரான் திட்டமிட்டுள்ளதாகத் தகவல் வெளியானது.

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் அமைப்பினர் இடையிலான போர் ஓராண்டைக் கடந்து நீடித்து வருகிறது.

ஹமாஸ்க்கு ஆதரவாக லெபனானில் செயற்பட்டு வரும் ஹிஸ்புல்லா அமைப்பும் இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தி வருகிறது. ஹமாஸ் ஆயுதக் குழு, ஹிஸ்புல்லா அமைப்பு ஈராக்கில் செயற்பட்டு வரும் பயங்கரவாத குழுக்கள், ஏமனில் செயற்பட்டு வரும் ஹவுதி கிளர்ச்சியாளர்களுக்கு ஈரான் ஆதரவு வழங்கி வருகிறது.



இதற்கிடையே கடந்த ஒக்டோபர் 2ஆம் திகதி இஸ்ரேல் மீது ஈரான் ஏவுகணைகள், ட்ரோன்கள் மூலம்தாக்குதல்நடத்தியது.

இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் கடந்த 26 ஆம் திகதி ஈரான் தலைநகர் மற்றும் பிற நகரங்களில் உள்ள இராணுவ நிலைகளை குறி வைத்து இஸ்ரேல் திடீர் தாக்குதல் நடத்தியது. இந்தத் தாக்குதலில் 5 பேர் உயிரிழந்தனர். இஸ்ரேல் தாக்குதலுக்கு ஈரான் பதிலடி கொடுக்கலாம் என எதிர்பார்க்கப்பட்டது. ஈராக்கில் இருந்து இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்த ஈரான் திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியானது.

இந்நிலையில், இஸ்ரேலுக்கு தகுந்த பதிலடி கொடுக்கப்படும் என ஈரானின் உயரிய தலைவரான அயத்துல்லா அலி கமேனி மிரட்டல் விடுத்துள்ளார்.

இதுதொடர்பாக ஈரான் தலைநகர் டெஹ்ரானில் மாணவர்கள் மத்தியில் பேசிய அயத்துல்லா அலி கமேனி, ஈரான், ஈரான் மண் மற்றும் எதிர்ப்பு கூட்டணிக்கு (ஹமாஸ், ஹிஸ்புல்லா, ஹவுதி, ஈராக்கில் செயற்படும் பயங்கரவாதிகள்) எதிராக மேற்கொண்ட நடவடிக்கைகளுக்காக எதிரிகளான அமெரிக்கா மற்றும் இஸ்ரேலுக்கு நிச்சயம் கடுமையான பதிலடி கொடுக்கப்படும் என தெரிவித்தார். (ந-8)

# கூரை உடைந்து விழுந்ததில் 14 பேர் உயிரிழப்பு!

## செர்பியாவில் துயரம்



(செர்பியா)

செர்பியா நாட்டின் வடக்கு மாகாணம் ஓடினா மாகாணம் நோவி சட் நகரில் அமைந்துள்ள ரயில் நிலையத்தில் திடீரென ரெயில் நிலையத்தின் கொங் கிரீட் மேற்கூரை இடிந்து விழுந்ததில் 14 பேர் உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

தகவலறிந்து விரைந்து வந்த மீட்புக் குழுவினர் இடிபாடுகளுக்குள் சிக்கி காயமடைந்த 4 பேரை மீட்டுள்ளனர்.

இறந்தவர்களில் ஏழு வயதுடைய சிறுமியும் அடங்குவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழப்புக்களின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என அச்சம் வெளியிடப்பட்டுள்ளது. (ந-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ணைத் தாக்குதலில்
# ட்பட 84 பேர் பலி!



## சைக்கிள் ஓட்டும்போது செல்போன் பயன்படுத்தினால் 6 மாதம் சிறை

(டோக்கியோ)

சைக்கிள் ஓட்டும்போது செல்போன் பயன்படுத்துவதே விபத்துக்கு முக்கிய காரணம் என கண்டறியப் பட்டது.

ஜப்பானில் உள்ள மக்கள் சைக்கிள் போக்கு வரத்தையே பெரிதும் விரும்புகின்றனர். குறிப்பாக கொரோனாத் தொற்று காலத்தில் பொது போக்கு வரத்து முடங்கியது.

இதனையடுத்து அங்கு சைக்கிள் ஓட்டுபவர்களின் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்தது. அதேசமயம் சைக்கிள் ஓட்டும்போது கவனக்குறைவால் ஏற்படும் விபத்துகளின் எண்ணிக்கையும் பல மடங்கு உயர்ந்தது.

அதாவது கடந்த ஆண்டில் மட்டும் ஜப்பானில் சுமார் 72 ஆயிரம் சைக்கிள் விபத்துகள் பதிவாகி உள்ளன. இது நாடு முழுவதும் ஏற்படும் மற்ற வாகன விபத்துகளில் 20 சதவீதம் ஆகும்.


இதனால் சைக்கிள் விபத்துகளை கட்டுப்படுத்த அரசாங்கம் முடிவு செய்தது. அப்போது சைக்கிள் ஓட்டும்போது செல்போன் பயன்படுத்துவதே விபத்துக்கு முக்கிய காரணம் எனக் கண்டறியப்பட்டது. எனவே போக்குவரத்து விதிகளில் அங்கு புதிய திருத்தங்கள் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளன.

அதன்படி சைக்கிள் ஓட்டும்போது செல்போன் பேசவோ, இணையத்தை பயன்படுத்தவோ கூடாது. இதனை மீறுபவர்களுக்கு 6 மாதம் சிறை தண்டனை அல்லது சுமார் ரூ.50 ஆயிரம் வரை அபராதம் விதிக்கப்படும்.

இதுதவிர மது போதையில் சைக்கிள் ஓட்டினாலும்3 ஆண்டுகள் சிறை தண்டனை அல்லது சுமார் ரூ.2 3/4 லட்சம் அபராதம் விதிக்கும் வகையில் போக்குவரத்து விதிமுறைகளில் திருத்தம் கொண்டு வரப் பட்டுள்ளது. (நி-8)

## இந்துக்களுடன் தீபாவளி கொண்டாடிய ட்ரூடோ





(ஒட்டாவா)

கனடாவில் இயங்கி வந்த காலிஸ்தான் பிரிவினைவாத தலைவர் ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொலை இந்தியா- கனடா இடையே மிகப்பெரிய விரிசலை ஏற்படுத்தியுள்ளது.

இருநாட்டுத் தூதரக உற வுகளும் முறிந்த நிலையில் கனடாவில் வன்முறை, மிரட்டல் மற்றும் உளவுத்தகவல்கள் சேகரிப்பு போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள இந்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா உத்தர விட்டதாகப் பரபரப்பு குற்றச்சாட்டும் முன்வைக் கப்பட்டுள்ளது.

மேலும் இந்தியாவால் தங்களுக்கு சைபர் ஆபத்து உள்ளது என்றும் கனடா தெரிவித்துள்ளது. இவையனைத்தும் இந்தியாவைக் கோபப்படுத்தி உள்ள நிலையில் தற்போது கனடா அதிபர் ட்ரூடோ அந்நாட்டில் வாழும் இந்தியாவைச் சேர்ந்த இந்து மதத்தினருடன் சேர்ந்து தீபாவளி கொண்டாட்டங்களில் ஈடுபட்ட வீடியோ வைரலாகி வருகிறது.

கடந்த சில மாதங்களில் தான் 3 இந்து கோவில்களுக்கு சென்றதாகவும் அங்கு தனது அதிஷ்டத்துக்காக கையில் அன்புடன் கயிறு கட்டி விடப்பட்டதாகவும் அதுவாகக் கழன்று விழும்வரை தான் அவற்றை அவிழ்க்கப் போவதில்லை என்றும் தனது சமூக வலைத்தள பக்கத்தில் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

இந்த ஒளி மிகுந்த பண்டிகையில் இருள் அழிய வேண்டும். கனடாவில் வாழும் இந்து மக்கள் சிறந்தவர்கள். நவம்பர் மாதம் இந்து மத காலாசார மாதமாக கனடாவில் கொண்டாடப்படுகிறது. கனடா இந்துக்களுக்கு நாங்கள் எப்போதும் உறுதுணையாக நிற்போம் என்றும் அவர் தெரிவித்தார்.

இதற்கிடையே கனடாவில் உள்ள இந்திய தூதரகத்தில் நடக்க இருந்த தீபாவளி நிகழ்ச்சிகளை இந்திய வெளியுறவுத் துறை ரத்து செய்தமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

## 4 ஆயிரம் ஆண்டு பழைமையான நகரம் சவுதி அரேபியாவில் கண்டுபிடிப்பு

(ஜெர்த்தா)

சவுதி அரேபியாவில் 4 ஆயிரம் ஆண்டுகள் பழைமையான நகரத்தை தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

இந்த நகரம் ஆரம்பகால வெண்கல யுகத்தின் கிமு 2400 இற்கு முந்தையது என ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த தொல்பொருள் ஆராய்ச்சியாளர் குய்லூம் சார்லக்ஸ் மற்றும் அவரது குழுவினரால் இந்த நகரம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இந்த நகரத்தில் 14.5 கிலோமீற்றருக்கு சுவர் இருந்துள்ளதாக ஆராய்ச்சியாளர்கள் மேற்கொண்ட ஆய்வில் தெரியவந்துள்ளது. அல்-நதாஹ் என்று அழைக்கப்படும் நகரமே இவ்வாறு வறண்ட பாலைவனத்தால் சூழப்பட்ட பசுமையான பகுதியில் நீண்ட காலமாக மறைந்து இருந்துள்ளது.

நெடுந் தூர வர்த்தகத்துக்காக ஒருங்கிணைக் கப்பட்ட சிறிய கோட்டைகளை மையமாகக் கொண்டு ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட நினைவுச் சின்ன சுவர் அங்கு காணப் பட்டதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்தனர். (நி-8)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எல்லாளன் சமாதியை வணங்கி
# பரப்புரையை ஆரம்பித்த
## தமிழ் தேசிய பண்பாட்டுப் பேரவை

(அநுராதபுரம்)

தமிழ் தேசிய பண்பாட்டுப் பேரவை எதிர் வரும் பாராளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்டத்தில் தனித்துவமாக சுயேட்சை 21 இல் களமிறங்கியுள்ள நிலையில் நேற்று முன் தினம் தமது யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டத்திற்கான தேர்தல் பரப்புரையின் தொடக்கத்தை அநுராதபுரத்தில் அமைந்துள்ள பேரரசன் எல்லாளனின் சமாதியை வணங்கிய பின் ஊடகங்களை சந்தித்து தங்களது தேர்தல் கருத்துக்களை வழங்கினார்கள்.

மேலும் அநுராதபுரம் கந்தசுவாமி ஆலய தரிசனம் மற்றும் ஆலய நிர்வாகத்தினர் அங்கிருக்கக்கூடிய ஒரு சில தமிழ் பொது அமைப்புக்களுடனும் சமகால அரசியல், சமூக நிலவரங்கள் தொடர்பிலும் தமிழ் தேசிய பண்பாட்டுப் பேரவையின் தலைவர், செயலாளர் மற்றும் முக்கியஸ்தர்கள் கலந்துரையாடினார்கள். (நி-8)



# தேர்தல்களம்

## நேர்மையான அரசியலை முன்னெடுத்துச் செல்வோம்

### சுகாஷ் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

13ஆவது திருத்தத்தை நிராகரித்து இனம் சார்ந்த விடுதலை அரசியலை முன்னெடுத்து வருகின்ற ஒரே கட்சி தமிழ் தேசிய மக்கள் முன்னணி மாத்திரமே என அக்கட்சியின் வேட்பாளரும் சட்டத்தரணியுமான க.சுகாஷ் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில் அதிக ஆசனங்களோடு எம்மை பாராளுமன்றம் அனுப்பி வையுங்கள். அப்போது தான் எம் இனத்திற்கு ஒரு நீதியையும் தீர்வையும் பெற்றுத்தர முடியும். சலுகைகளுக்கு விலை போகாது. இனம் சார்பாக பேசக் கூடிய ஒரு தரப்பாக எம்முடைய கட்சி காணப் படுகின்றது.

எனவே மக்கள் சிந்தித்து எமக்கு வாக்களித்தால் எம் இனம் சார்ந்த நேர்மை யானதொரு அரசியலை மேற்கொள்வோம் என்ற உத்தரவாதத்தினை எம் உறவுகளுக்கு வழங்கி நிற்கிறோம் என அவர் தெரிவித்தார். (நி-8)

## பெண்கள் வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்த வேண்டும் - மிதிலைச் செல்வி



(யாழ்ப்பாணம்)

யுத்தம் மௌனிக்கப் பட்டு 15 ஆண்டுகள் கடந்து விட்ட நிலையிலும் தமது வாழ்வியலை கட்டியெழுப்ப முடியாமல் மிகவும் துன்பப்படுகின்றார்கள்.


அவயங்களை இழந்து வாடும் முன்னாள் பெண் போராளிகளுக்கும் பெண் தலைமைத்துவத்தையுடைய குடும்பங்களுக்கும் வாழ்வியலை மேம்படுத்தும் திட்டம் என்னிடமுள்ளது என தமிழ் மக்கள் கூட்டணியின் வேட்பாளர் ஸ்ரீ பத்மநாதன் மிதிலைச் செல்வி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் ஏற்கனவே உழைக்கும் மகளிர் அமைப்பு என்ற பெண்கள் அமைப்பிற்கு தலைமை தாங்குகின்றேன். பெண்கள் சொந்த உழைப்பில் வாழ வேண்டுமென்பதே எனது கோஷம். இது தேர்தலுக்கான கோஷம் மட்டுமல்ல எம் தமிழ் சமூகத்தில் தந்தையில், சகோதரங்களில், கணவனில் தங்கி வாழும் பெண்களே அதிகம். உலகளவில் பெண்கள் எங்கேயோ போய்க் கொண்டிருக்கின்றனர். அவர்கள் தலைநிமிர்ந்து நிற்க தம் சொந்தக்காலில் நிற்க வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி-8)


# அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு

கடந்த 05.10.2024 அன்று
இறைபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

அமரர். **ஆறுமுகம் யோகானந்தம்**



அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 04.11.2024 இன்று திங்கட்கிழமை அதிகாலை 4.00 மணியளவில் திக்கம் நீர்வளைப்பிள்ளையார் ஆலய தீர்த்தக் குளத்தடியில் இடம்பெற்று, கீரிமலை புனித தீர்த்தக் கரையில் அஸ்தி கரைக்கப்படும்.அதனைத் தொடர்ந்து முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் சபிண்டீகரண கிரியைகள் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

(இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

அல்வாய் மேற்கு,
திக்கம்.

(515)

தகவல்
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடப்பாண்டில் இதுவரை வீதி விபத்துக்களால் 1898 பேர் உயிரிழப்பு



(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் இவ் வருடத்தின் ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து ஒக்டோபர் மாதம் 25 ஆம் திகதி வரையான காலப் பகுதிக்குள் இடம்பெற்ற 1,818 வீதி விபத்துக்களில் 1,898 பேர் உயிரிழந்துள்ளதாகப் பிரதி பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே பிரதி பொலிஸ் மா அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் வீதி விபத்துக்களில் உயிரிழந்தவர்களில் 676 பேர் பாதசாரிகள் ஆவர்.

1,818 வீதி விபத்துக்களில் 730 மோட்டார் சைக்கிள் விபத்துக்களும் 209 முச்சக்கரவண்டி விபத்துக்களும் 258 லொறி விபத்துக்களும் 146 பஸ் விபத்துக்களும் 118 வான் விபத்துக்களும் அடங்குகின்றன. மேலும் 42 வாகனங்களின் சாரதிகள் விபத்துக்களை ஏற்படுத்தி தப்பிச் சென்றுள்ளனர்.

எனவே வீதிகளில் பயணிக்கும் பொதுமக்கள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும் என பிரதி பொலிஸ் மா அதிபர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-8)

# கடலட்டையுடன் அறுவர் கைது

(மன்னார்)

மன்னார் கிழக்கு கடற்கரைப் பகுதியான அரிப்பு பண்டாரவெளி கடற்பரப்பில் கடற்படையால் கடந்த வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையின் போது சட்ட விரோதமான முறையில் இரவு வேளையில் கடல் அட்டை பிடித்த 6 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நடவடிக்கையின் போது 1 டிங்கி படகு மற்றும் 227 கடல் அட்டைகள் கைப்பற்றப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

சந்தேகநபர்கள் கடல் அட்டை மற்றும் இழுவைப் படகுகளுடன் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக மன்னார் கடற்றொழில் உதவிப் பணிப்பாளர் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டனர். (நி-8-285)

# புத்தகம் வாங்க கொடுப்பனவு ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களுக்கு பாடசாலைப் புத்தகங்களை கொள்வனவு செய்வதற்கான கொடுப்பனவை வழங்கத் திட்டமிட்டுள்ளதாக . ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (நி-8)

# பண்டிகை காலத்தில் முட்டை விலை உயரும்

(கொழும்பு)

எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் முட்டையின் விலை வேகமாக உயரும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

இம்மாதம் நடுப்பகுதியில் மீண்டும் முட்டை விலையை உயர்த்த கோழிப்பண்ணை உரிமையாளர்கள் திட்டமிட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது.

ஒரு முட்டையின் உற்பத்திச் செலவு 34 ரூபாயாக உயர்ந்துள்ளதால் முட்டை விற்பனையில் உற்பத்திச் செலவைக் கூட ஈடுகட்ட முடியாமல் பண்ணை உரிமையாளர்கள் கடும் சிரமத்துக்கு உள்ளாகியுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இதன் காரணமாக எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் முட்டையின் விலை வேகமாக உயரும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் பின்னணியில் பெரிய அளவிலான கோழிப் பண்ணை உரிமையாளர்கள் இருப்பதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. (நி-8)

## வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

# பப்பாசிப்பழம்

**Botanical name- carica papaya**
**Family- caricaceae**




டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

ஐந்து மருத்துவ முக்கியத்துவமுடைய பழங்களுள் பப்பாசிப்பழமும் ஒன்றாகும். பப்பாசிப்பழமானது அதிக நார்ச்சத்தும குறைந்தளவு சீனிச்சத்தும் கொண்டது. காலையில் வெறும் வயிற்றில் இப்பழத்தை சாப்பிடும்போது உடலிலுள்ள நச்சுக்களை இலகுவாக வெளி யேற்றுவதுடன் மலத்தை இலகுவாக வெளியேற்றவும் செய்யும். அத்துடன் ரத்தத்தில் சீனியின் அளவை சீராக பராமரிக்கவும் செய்யும். பெரும்பாலும் பழங்களை உணவு உண்டு 4-5 மணித்தியாலங்களுக்குள் எடுப்பதைத் தவிர்த்து கொள்ள வேண்டும்.

பப்பாசிப்பழம் சாப்பிடுவதால் இருதய நோய்களிலிருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்ளக் கூடியதாக இருக்கும். அத்துடன் செரிமானத்தையும் சீராக்கி, நோய் எதிர்ப்பு சக்தியையும் அதிகரிக்கச் செய்யும். பப்பாசிப்பழத்தில் காணப்படும் Papain எனும் நொதியமானது செரிமாணம், ஆரோக்கியத்தை மேம்படுத்துவதுடன் இப் பழத்தில் அதிகளவு உயிர்ச்சத்து C உம் காணப்படுகிறது. இதனால் நீர்ப்பீடனமும் அதிகரிப்பதுடன் அதில் ஒட்சியேற்றத்தன்மை. (Antioxidant) அதிகளவு இருப்பதாகவும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இதனால் புற்றுநோய் அபாயத்தை தடுகக்கும் பழங்களுள் பப்பாசிப்பழமும் அடங்கும்.

நாம் எடுக்கும் உணவின் அனுசேபத்தை பப்பாசிப்பழம் சாப்பிடும் போது இலகுவாக்கக் கூடியதாக இருக்கும். அதாவது அசைவ உணவான இறைச்சி



வகைகளை எடுக்கும் போது பப்பாசிப்பழமானது இலகுவாக உணவை சமிபாடடையச் செய்யக் கூடியதாக உள்ளது. பப்பாசிப்பழத்தில் அதிகளவு பொற்றாசியம் காணப்படுவதால் அதி உயர் குருதி அமுக்கத்தை பேணக்கூடியதாக இருக்கிறது.

பப்பாசிப் பழத்தில் உயிர்ச்சத்து C உம் இரும்புச்சத்தும் காணப்படுவதால் பழத்தை சாப்பிடும் போது இரும்புச்சத்தும் இலகுவாக அகத்துறிஞ் சப்படுகிறது. அத்துடன் இரத்தத்திலுள்ள ஈமோகுளோபினின் அளவையும் அதிகரிக்கச் செய்கிறது. பப்பாசிப்பழத்தில் அதிகளவு உயிர்ச்சத்து A காணப்படுவதால் கண்பார்வையைத் தெளிவாக்குவதுடன் சருமத்தையும் பாதுகாப்பாகவும் வைத்திருக்க உதவும். ஆனாலும் தினமும் அளவிற்கு அதிகமாக பப்பாசிப்பழம் சாப்பிட்டால் கழிச்சல் சமிபாட்டு பிரச்சினையை ஏற்படுத்தலாம்.

மொத்தமாக பப்பாசிப்பழத்தில் உயிர்ச்சத்து C, போலேற்று, உயிர்ச்சத்து A, மக்னீசியம், பொற்றாசியம், நார்ச்சத்து, இரும்புச்சத்து போன்றவை காணப்படுகிறது. இருதயத்திற்கு, கண்பார்வைக்கு கண் ஆரோக்கியம், உடலின் நோய் எதிர்ப்பாற்றல் ஆகியவற்றை மேம்படுத்துவதோடு புற்றுநோய் அபாயத்தையும் தரக்கூடியதாக உள்ளது.


பப்பாசிப்பழத்தை சாப்பிட்டு வரும் போது கொலாஜின் உற்பத்தியைத் தூண்டி தலைமுடி வளர்ச்சியையும் தலைமுடியையும் பாதுகாக்கின்றது. பப்பாசிப்பழத்தில் அதிகளவு நார்ச்சத்தும் குறைந்த கலோரியும் காணப்படுவதனால் அதிகளவு உணவு எடுப்பதைத் தவிர்த்து. அதிகளவு சாப்பிடுவதால் ஏற்படும் உடற்பருமனையும் தடுக்கின்றது.

கர்ப்பிணிப் பெண்கள் பப்பாசிப்பழம் சாப்பிடலாமா? நன்றாகக் கனிந்த பப்பாசிப் பழத்தைச் சாப்பிடலாம். ஏனெனில் அதிகளவு போசனைக் கூறுகள் காணப்படுகின்றது. பப்பாசிக் காய்களில் செங்காய்களில் காணப்படும் பால் மற்றும் papain போன்ற சத்துக்கள் கர்ப்பப்பையை சுருங்க வைக்கும் தன்மையுண்டு. கர்ப்பிணிப் பெண்களில் prostog landin எனும் ஓமோன் காணப்படும்.

பப்பாசிக்காயில் இருக்கும் சத்துக்கள் மேற்படி ஹோமோனை தூண்டி கர்ப்பப்பையை சுருங்கச் செய்யலாம். எனவே அடிக்கடி பழுக்காத பப்பாசிக்காய்களை சாப்பிடும் போது கருச்சிதைவு ஏற்படலாம்.

தினமும் ஒரு பப்பாசி பழத்துண்டை சாப்பிட்டு வரும் போது கண்பார்வைக்கு முக்கியமான நரம்பு செறிந்த கண்ணின் பகுதியான macular இனை பாதுகாத்து (macular degenerution) கண்பார்வையைப் பாதுகாத்துக் கொள்ள உதவுகின்றது. இதற்கு பப்பாசிப்பழத்தில் காணப்படும் zeoxantheine எனும் வேதியற்சத்தே காரணமாகும்.

நாம் எடுக்கும் உணவிலுள்ள கல்சியம் சத்தானது. என்புகளுக்கு போய்ச்சேர உயிர்ச்சத்து K அவசியமாகும். பப்பாசிப்பழத்தில் அதிகளவு உயிர்ச்சத்து K காணப்படுவதால் என்புகளையும் பலப்படுத்தக்கூடியதாக இருக்கும். பப்பாசிப்பழத்தில் காணப்படும் கோலின் எனும் சத்து தூக்கத்தை, ஞாபக சக்தியையும் சீராக்கும். படிக்கும் திறனையும் அதிகரிக்கச் செய்யும். இவ்வளவு பலன்களையும் பெற வேண்டி இருப்பின் நன்றாக நிறைய விதைகளுள்ள பழங்களையே பயன்படுத்த வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 622





இல்லாவிடில் அந்தப் பயங்கரமான பழி அவரையும் சேர்ந்திருக்கும்" "ஐயா! மதுராந்தகன் எப்படி மாறிப் போயிருக்கிறான் என்று தெரிந்தால் ஆச்சரியப்பட்டுப் போவீர்கள்."

"ஆச்சரியப்பட மாட்டேன், தாயே! அவை எல்லாம் எனக்குச் சில காலமாகத் தெரிந்த விடயம் தான்."

"தெரிந்திருந்தும் அவனுடைய மனத்தை மாற்றத் தாங்கள் ஒரு முயற்சியும் செய்யவில்லை. இப்போதாவது யோசனை சொல்லி உதவுங்கள்."

"அம்மா! மதுராந்தகருடைய மனத்தை மாற்ற வேண்டிய அவசியம் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. அவருடைய கட்சியை ஆதரித்துப் பேசவே நான் வந்திருக்கிறேன்." "அப்படியென்றால்? எனக்கு விளங்கவில்லை, ஐயா!"

"அம்மணி! மதுராந்தகர் இந்தச் சோழ சிங்காதனம் தமக்கு உரியது என்று கருதுகிறார். சக்கரவர்த்திக்குப் பிறகு தாம் இந்த இராஜ்யத்தை ஆளவேண்டுமென்று ஆசைப்படுகிறார். அது நியாயமான ஆசை, நன்றாக அவர் மனத்தில் வேரூன்றி விட்ட ஆசை. அதைத் தடுக்க முயல்வதினால் சோழ இராஜ்யத்துக்கு நன்மை ஏற்படாது. அதை நிறைவேற்றி வைப்பதுதான் உசிதம்"

"ஐயோ! இது என்ன வார்த்தை? தாங்கள் கூடவா சோழ சக்கரவர்த்திக்குத் துரோகம் செய்யத் துணிந்துவிட்டீர்கள்? இது என்ன விபரீத காலம்?"

"பெருமாட்டி! சக்கரவர்த்திக்குத் துரோகம் செய்ய நான் கனவிலும் கருதியதில்லை. சக்கரவர்த்தியின் கட்டளையின் பேரிலேயே வந்தேன். அவர் தங்களிடம் விண்ணப்பித்துக் கொள்ளச் சொன்னதைத்தான் சொல்கிறேன், சக்கரவர்த்தியின் காலத்துக்குப் பிறகு மதுராந்தகர் சிங்காதனம் ஏற விரும்புகிறார். பழுவேட்டரையர்கள் அதற்காகச் சதி செய்கிறார்கள். ஆனால் சக்கரவர்த்தி இப்போது மதுராந்தகருக்கு முடிசூட்டி விட்டுச் சிங்காசனத்திலிருந்து விலகிக் கொள்ள விரும்புகிறார். இதற்குத் தங்கள் சம்மதத்தைப் பெற்று வரும்படி என்னை அனுப்பியிருக்கிறார்"

"சக்கரவர்த்தி அவ்விதம் செய்ய விரும்பலாம். ஆனால் அதற்கு என்னுடைய சம்மதம் ஒருநாளும் கிட்டாது. என் பதியின் விருப்பத்துக்கு விரோதமான இந்தக் காரியத்தை நான் ஒப்புக்கொள்ள மாட்டேன். கல்விக் கடலின் கரை கண்ட முதல் அமைச்சரே! சக்கரவர்த்தியே சொன்னாலும் தாங்கள் இந்த முறை தவறான காரியத்தை என்னிடம் சொல்ல எப்படி வந்தீர்? சோழ சிங்காசன உரிமையைப் பற்றித் தங்களுக்கும் எனக்கும் மட்டும் தெரிந்த சில உண்மைகள் இருக்கின்றனவென்பதைத் தாங்கள் அடியோடு மறந்துவிட்டீர்களா?"

"அம்மணி! நான் எதையும் மறக்கவில்லை. தங்களுக்குத் தெரியாத சில உண்மைகளும் எனக்குத் தெரியும். ஆகையினாலேயே சக்கரவர்த்தியின் தூதனாகத் தங்களிடம் வந்தேன்"

"ஐயா! தங்களுடைய மதிநுட்பமும், இராஜ தந்திரமும் உலகம் அறிந்தவை. அவற்றைப் பெண்பாலாகிய என்னிடம் காட்ட வேண்டாம்"


"பெருமாட்டி! தங்களிடம் நான் வாதாட வரவில்லை. என் சாமார்த்தியத்தைக் காட்டுவதற்கும் வரவில்லை. இந்தச் சோழ நாட்டைப் பேராபத்திலிருந்து காப்பாற்றி அருளும்படி மன்றாடிப் பிரார்த்தனை செய்ய வந்தேன்."

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## கரடியும் இரண்டு நண்பர்களும்



ஒரு ஊரில் இரண்டு இணை பிரியாத நண்பர்கள் இருந்தார்கள். அவர்களில் ஒருவன் ராகவன் மற்றொருவன் சுந்தரன். ஒரு நாள் இருவரும் தேன் எடுப்பதற்காக காட்டுப் பகுதிக்குச் சென்றனர். செல்லும் வழியில் ராகவன் சுந்தரனிடம் நீ எதைப் பற்றியும் பயப்படாமல் என்னுடன் வா என்ன துன்பம் வந்தாலும் நான் உன்னைக் காப்பாற்றுவேன் என்று கூறினான்.

காட்டிலுள்ள பறவைகள், மரங்கள், காட்டு விலங்குகள் போன்றவற்றை வேடிக்கை பார்த்துக் கொண்டே இருவரும் நடந்து சென்று கொண்டிருக்கும் பொழுது அங்கே கரடி ஒன்றின் உறுமும் சத்தம் கேட்டது. சிறிது நேரத்தில் அவர்கள் செல்லும் வழியிலேயே, அந்த கரடி வந்து கொண்டிருந்தது. கரடியைக் கண்டதுமே இருவரும் பயத்தில் ஓடத் தொடங்கினார்கள். கரடியும் அவர்களைத் துரத்தியது. சில வினாடிகள் ஓடிய பிறகு ராகவன் ஒரு மரம் இருப்பதை கண்டான். உடனடியாக அந்த மரத்தில் ராகவன் ஏறி அமர்ந்து கொண்டான்.

சுந்தரனுக்கோ மரம் ஏறத் தெரியாது என்று ராகவன் நன்கு அறிந்திருந்தும் அவனைக் கீழே விட்டு விட்டுத் தான் மட்டும் தப்பித்தால் போதும் என்ற சுயநலத்தோடு ராகவன் நடந்து கொண்டான். சுந்தரனுக்கு மரம் ஏறத் தெரியாததால் என்ன செய்வதென்று தெரியாமல் எப்படி கரடியிடமிருந்து தப்புவது என்று யோசித்தான். இறந்தவன் போல் நடித்தால் கரடி தன்னைக் கொல்லாது என்று ஒரு யோசனை தோன்ற, பின்னர் நிலத்தில் இறந்தவனைப்போல் மூச்சை அடக்கிக் கொண்டு படுத்துக் கொண்டான்.

அப்போது அங்கு வந்த கரடி கீழே விழுந்து கிடந்தவன் காதருகே சென்று நுகர்ந்து பார்த்தது. சுந்தரன் இறந்துவிட்டான் என்று நினைத்து அந்த கரடி அங்கிருந்து நகர்ந்து போய் விட்டது. சுந்தரனின் காதருகே சென்று கரடி முகர்ந்து பார்த்ததை, மேலேயிருந்து பார்த்த ராகவன் கரடி சுந்தரனிடம் ஏதோ [illegible]டான். பிறகு அவன் இறந்தவன் என்று முடிவு செய்து கரடி அங்கிருந்து நகர்ந்து போய் விட்டது.

கரடி செல்வதை மரத்தின் மேலிருந்து பார்த்த ராகவன், கீழே இறங்கி வந்து சுந்தரனை எழுப்பினான். சுந்தரா எழுந்திரி நாம் தப்பி விட்டோம்.

அந்த கரடி சென்று விட்டது என்று கூறிச் சுந்தரனை எழுப்பினான்.

சுந்தரனும் எழுந்து தன் யோசனை வெற்றியடைந்ததை எண்ணி நிம்மதிப் பெருமூச்சு விட்டான்.

ராகவன், சுந்தரனிடம், கரடி உன் காதில் என்ன இரகசியம் சொன்னது? என்று கேட்டான். அதற்கு சுந்தரன், ஆபத்தில் உதவாத நண்பனை என்றுமே நம்பக் கூடாது! என்று சொல்லிவிட்டுப் போனது என்றான்.

சுந்தரனின் பதிலைக் கேட்டு, ராகவன் தன் சுயநலப் புத்தியை எண்ணி நொந்து கொண்டான். சுந்தரனோ இனி மேல் நம் நட்பு நீடிக்க வேண்டாம் என்று கூறி விட்டுத் தனியே நடந்து சென்றான்.

நீதி : ஆபத்தில் உதவுபவனே நல்ல நண்பன்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

மாற்றங்களை எதிர்க்காமல் ஏற்றுக்கொள்பவரே தன்னை முழுமையான சக்திசாலியாய் மாற்றிக் கொள்கிறார்.
– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## நல்ல தலைவன் யார் என்பதை வேட்பாளர்கள் இப்போது உணர்வர்

தொகுதி ரீதியான பாராளுமன்றத் தேர்தல் முறைமை என்று இல்லாமல்போனதோ அன்று தொட்டதுதான் அரசியல் கட்சிகளுக்குள் ஏற்பட்ட போட்டிகளும் முரண்பாடுகளுமாகும்.

ஆம், முன்பெல்லாம் தொகுதி ரீதியாகப் பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் தேர்ந்தெடுக்கப்படும்.

அந்தந்தத் தொகுதிகளில் போட்டியிடும் வேட்பாளர்கள் தத்தம் தேர்தல் பிரசாரங்களை தமது தொகுதிகளில் மேற்கொள்வர்.

அதேநேரம் அந்தந்தத் தொகுதி மக்களுக்கும் தமது வேட்பாளர்களை நன்கு தெரிந்திருக்கும்.

ஆனால் என்று விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைமை கொண்டுவரப்பட்டதோ அன்று தொட்டதுதான் ஒவ்வொரு அரசியல் கட்சிகளுக்குள்ளும் ஏற்பட்ட உட்கட்சிப் பூசலாகும்.

இப்போது இந்த நாட்டில் நீண்ட நெடுங்காலம் கோலோச்சிய அரசியல் கட்சிகள் அஸ்தமித்துப் போயின, எனில் அதற்கு மூல காரணம் நாம் குறிப்பிட்ட இத்தேர்தல் முறைமையே.

ஆம் தொகுதி என்ற நிலைமாறி, தேர்தல் மாவட்ட ரீதியாக வேட்பாளர்கள் போட்டியிடும் போது, வெற்றி வாய்ப்பை தமதாக்க வேண்டும் என்ற நோக்கமே ஒவ்வொரு வேட்பாளர்களிடமும் இருக்கும்.

இங்குதான் முரண்பாடுகளும் வெறுப்புகளும் கருக்கட்டுகின்றன.

அதேநேரம் ஒரு கட்சி தனது வேட்பாளர்களை ஓரங்கட்டுகின்ற கழுத்தறுப்புப் போட்டியிலும் ஈடுபடுவது சர்வசாதாரணமாக நடந்தாகிறது.

இதன் காரணமாக எந்த அரசியல் கட்சிகளும் நீண்டு நிலைக்க முடியாத அளவில் பிரிவுகளும் எதிர்ப்புகளும் பகைமைகளும் வைராக்கியம் பெற்று அரசியல் கட்சிகளை அஸ்தமனமாக்கி விடுகின்றன.

ஆம், யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தை உதாரணத்துக்கு எடுத்துக் கொண்டால், ஒரு கட்சி அல்லது சுயேட்சைக் குழுவில் 9 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

இங்கு தத்தம் வேட்பாளர்கள் ஒன்பது பேரையும் அரவணைத்துச் செல்வது சாத்தியப்படாத காரியம்.

அதிலும் விருப்பு வாக்கு என்பது மூன்று பேருக்கு என வரையறுக்கப்பட்டிருப்பதால், நிலைமை இன்னும் மோசம் எனலாம்.

இங்குதான் நல்ல தலைவன் யார் என்பதை வேட்பாளர்கள் அனுபவ ரீதியாகப் புரிந்து கொள்கின்றனர்.

உண்மை. வெற்றி தோல்வி என்பதற்கு அப்பால் – பாராளுமன்றப் பதவி என்பதற்கு மேலாக, நாம் அனைவரும் ஓரணி. எனவே நாம் ஒன்றாகப் பயணிப்போம். எமது கட்சிக்காகப் பிரசாரம் செய்வோம். எங்களுக்குள் பேதமை வேண்டாம். சார்பு வேண்டாம். உள்ளொன்றும் வெளியொன்றும் வேண்டாம் என்ற உள்ளத் தூய்மையோடு தனது வேட்பாளர்களை அரவணைத்துச் செல்பவரே உண்மையான – சிறந்த – நல்ல தலைவனாவான். இதுவே உண்மையாம்.

# வன்முறையற்ற தேர்தல் கலாசாரம் மலர்கிறது

## கபே அமைப்பு தெரிவிப்பு

(வவுனியா)

ஜனநாயகத்தை மதிக்கின்ற வன்முறைகள் அற்ற தேர்தலுக்காக அனைவரும் ஒன்றிணையும் கலாசாரம் உருவாக்கப்பட்டுக் கொண்டிருப்பதாக சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் அமைப்பின் (கபே) நிறைவேற்றுப் பணிப்பாளர் மனாஸ் மக்கீன் தெரிவித்தார்.

கபே அமைப்பின் அமைதியான தேர்தலுக்காக ஒன்றுபடுவோம் எனும் தொனிப்பொருளிலும், 18 வயதிற்கு மேற்பட்ட வாக்காளர்களிற்கான தெளிவூட்டும் நிகழ்வும் வவுனியாவில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் நேற்று இடம்பெற்றது.

இதன்பின்னர் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,கடந்த 15 வருடங்களுக்கு முன்னர் இருந்த தேர்தல் நிலவரமும் தற்போது இருக்கின்ற நிலவரத்தினையும் பார்க்கும் போது ஜனநாயகத்தை மதிக்கின்ற வன்முறைகள் அற்ற ஒரு சமாதானமான தேர்தலுக்காக அனைவரும் ஒன்றிணையும் ஒரு கலாசாரம் உருவாக்கப்பட்டுக் கொண்டிருப்பதை அவதானிக்கின்றோம்.

அதற்கு உதாரணமாகக் கடந்த ஜனாதிபதித் தேர்தலைக் குறிப்பிடலாம். அதே போல இந்தப் பொதுத்தேர்தலிலும் இதுவரை பாரியளவிலான வன்முறைகள் தொடர்பான முறைப்பாடுகள் எவையும் பதியப்படவில்லை.

சட்டவிரோதத் தேர்தல் பிரசாரம் தொடர்பான முறைப்பாடுகளே அதிகளவில் கிடைப்பதை அவதானிக்க முடிகின்றது.

இதேவேளை பிரசார நடவடிக்கைகளுக்கு சமூக ஊடகங்கள் பெரும் பங்கினை வழங்குகின்றன.

இவற்றை நாம் கண்காணிக்கும் போது அபேட்சகர்களுக்கு எதிரான சேறு பூசக்கூடிய இழிவுபடுத்தக் கூடிய போலிப்பிரசாரங்கள், நாளுக்குநாள் அதிகரிப்பதனை அவதானிக்க முடிகின்றது.

எனவே அனைத்து அரசியல்கட்சிகளை பிரதிநித்துவப்படுத்தக் கூடியவர்களை வரவழைத்து அமைதியான தேர்தலுக்காக ஒத்துழைப்போம் என்ற வகையில் சத்தியப்பிரமாணம் ஒன்றை பெறவுள்ளோம்.

எனவே சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல் நடைபெற வேண்டும் என்றால் நிச்சயமாக அது வன்முறையற்ற தேர்தலாக இருக்கவேண்டும்.

வன்முறையற்ற தேர்தலுக்காக அனைத்து அரசியல் கட்சிகளின் அபேட்சகர்களும், ஆதரவாளர்களும் ஒன்றிணைய வேண்டும் என கபே அமைப்பு கேட்டுக்கொள்கின்றது என்றார். (ந-7.250)

## 22 பிடியாணைகள் பிறப்பிக்கப்பட்ட சந்தேக நபரொருவர் கைது

(கொழும்பு)

கந்தானை - கந்தேவத்த பகுதியில் திருட்டுச் சம்பவமொன்று தொடர்பில் சந்தேகநபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதான நபர் மதுரங்குளிய பகுதியைச் சேர்ந்த 42 வயதுடையவர் மீது அத்துடன் புத்தளம் மற்றும் நீர்கொழும்பு நீதிமன்றங்கள் 22 திறந்த பிடியாணைகளை பிறப்பித்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

இந்த நிலையில் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கந்தானை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ந-7)

## அஸ்வெசும கொடுப்பனவு

## முறைகேடுகளை ஆராய 10 பேர் கொண்ட குழு

(கொழும்பு)

அஸ்வெசும கொடுப்பனவு வழங்கும் நடவடிக்கையின் போது அநீதி இழைக்கப்பட்ட நபர்களைக் கண்டறிவதற்கு முறையான விசாரணை நடத்த சமூக பாதுகாப்பு மற்றும் வெகுஜன ஊடக அமைச்சினால் பத்துப் பேர் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

அஸ்வெசும பலன்களை வழங்குவதில் உள்ள அசௌகரியங்கள், நியாயமற்ற செயன்முறை மற்றும் சாதாரண மக்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களைக் கண்டறிதல், அஸ்வெசும கொடுப்பனவு வழங்கும் முறையை மேம்படுத்தல், பல்வேறு தரப்பினரின் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கான சட்ட மற்றும் செயற்பாட்டு ஆலோசனைகளை வழங்குதல்என்பன இந்தக் குழுவின் பிரதான நோக்கமாகும்.

குழுவின் உத்தியோக பூர்வ உறுப்பினர்களில் சமூக சேவையாளர்கள், பத்திரிகையாளர்கள் மற்றும் வழக்கறிஞர்கள் செயற்படுவர் என சமூகப் பாதுகாப்பு மற்றும் ஊடக அமைச்சு தெரிவித்துள்ளது.(ந-7)

## வவு.இரட்டைக் கொலை

## சந்தேக நபருக்கு மேலும் மூன்று மாதம் மறியல்

வவுனியா தோணிக்கல் பகுதியில் கடந்த வருடம் ஜூலை மாதம் 23 ஆம் திகதி இடம்பெற்ற இரட்டைக் கொலை வழக்குடன் தொடர்புடைய சந்தேகநபரை மேலும் மூன்று மாத காலம் விளக்கமறியலில் வைக்குமாறு வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் உத்தரவிட்டுள்ளார்.

குறித்த பகுதியில் கடந்த வருடம் ஜூலை மாதம் 23 ஆம் திகதி இடம்பெற்ற இரட்டைக் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய வழக்கின் விசாரணை முடிவடையவில்லை எனக்கூறி சட்டமா அதிபர் சார்பில் அரச சட்டத்தரணி மனுத்தாக்கல் செய்ததையடுத்தே, இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

கொலையுடன் தொடர்புடைய ஒரு சந்தேகநபர் சம்பவத்தின் பின்னர் தனது மனைவி மற்றும் பிள்ளைகளை கனடாவிற்கு அனுப்பி வைத்ததாகவும் பிணை வழங்கப்பட்ட பின்னர் அவரும் கனடாவிற்கு தப்பிச் செல்ல இருப்பதாகவும் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இன்னும் சில சந்தேகநபர்கள் தலைமறைவாக இருப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தக் கொடூரமான கொலைச் சம்பவம் பிரதேச மக்களை அச்சமுற செய்ததாகத் தெரிவித்த நீதிபதி, சந்தேகநபர்களை 30.01.2025 வரையான காலப் பகுதிக்கு விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.(ந-7)

## 37 பில்லியன் டொலர்களை கடந்தது வெளிநாட்டுக் கடன்

(கொழும்பு)

2024 ஜூன் மாத இறுதியில் இலங்கையின் மொத்த வெளிநாட்டுக் கடன் 37.5 பில்லியன் அமெரிக்க டொலர்களை எட்டியுள்ளதாக நிதி, பொருளாதார அபிவிருத்தி, கொள்கை வகுத்தல், திட்டமிடல் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

அமைச்சின் மத்திய ஆண்டு நிதி நிலை அறிக்கையிலேயே இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இவ்வாண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் ஜூன் 30 ஆம் திகதி வரை மொத்தக் கடன் சேவைக் கொடுப்பனவுகள் 503 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஆகும்.

இதில் 275.1 மில்லியன் அமெரிக்க டொலர்கள் அரசால் திருப்பிச் செலுத்தலுக்காகவும், 227.9 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வட்டி செலுத்துதலுக்காகவும் ஒதுக்கப்பட்டது.

2022 ஏப்ரல் 12 ஆம் திகதியன்று ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசாங்கத்தின் இடைக்காலக் கடன் நிறுத்தக் கொள்கைக்கு இணங்க, இருதரப்பு மற்றும் வணிகக் கடனாளிகளிடமிருந்து பெறப்பட்ட கடன்களுக்கான வெளிப்புறக் கடன் சேவை தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

இதன் விளைவாக, ஜூன் மாத நிலவரப்படி, செலுத்தப்படாத கடன் சேவையானது 5.67 பில்லியன் அமெரிக்க டொலர்களாகவும், வட்டி 2.53 பில்லியன் டொலர்களாகவும் காணப்படுவதாகவும் அந்த அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ந-7)


**வடமாகாண மரநடுகை மாதம்**

**கார்த்திகை 01 - 30, 2024**

**“தன்னால் அந்த மரத்தின் நிழலில் ஒருபோதும் உட்காரமுடியாது என்று தெரிந்தும் மரங்களை நாட்டும் முதியவர்களைக் கொண்ட சமூகம் மிகப் பாரியளவில் வளர்ச்சியடையும்”**

– கிரேக்கப் பழமொழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இலங்கைப் பாராளுமன்றத் தேர்தல் - 2024

## வட மாகாண வாக்காளர்கள் தெரிந்திருக்க வேண்டியவை

தென்னாசியாவில் மிகவும் பழைமையான ஜனநாயக நாடு இலங்கை. இலங்கையர்களுக்கு 1931 ஆம் ஆண்டு டொனமூர் ஆணைக் குழுவின் பரிந்துரையின் பிரகாரம் சர்வஜன வாக்குரிமை அறிமுகப்படுத்தப்பட்டது. மக்களின் அடிப்படை உரிமைகளில் ஒன்றே வாக்குரிமை. அந்த உரிமையானது ஒவ்வொரு மனிதனதும் இறைமையில் பிரிக்க முடியாத ஒரு பகுதி. எனவே அந்த வாக்கை தேர்தலில் முறையாக அளிக்கவேண்டியதும் வாக்காளரின் பொறுப்பாகும்.

இவ்வாறு முக்கியத்துவம் பெற்று விளங்குகின்ற வாக்குரிமையின் அடிப்படையில் இந்நாட்டில் அளிக்கப்படுகின்ற வாக்குகளில் ஒரு குறிப்பிட்ட தொகை வாக்குகள் ஒவ்வொரு தேர்தல்களிலும் நிராகரிக்கப்பட்டு வருகின்றன. இதற்கு பல காரணங்களை கூறலாம். ஒவ்வொரு வகைத் தேர்தலுக்கும் (ஜனாதிபதித் தேர்தல், உள்ளூராட்சி மன்றத் தேர்தல் போன்றவை) வெவ்வேறு மாதிரியான வாக்களிப்பு முறை, வாக்குச்சீட்டுகளின் வடிவம் போன்றவையும் காரணங்களாகும்.

அதிலும் விசேடமாக வட மாகாண வாக்காளர்கள் பிழையாக வாக்களிக்கிறார்கள் அல்லது வேட்பாளரின் சின்னத்தை சரியாக அடையாளம் காணமுடியாமல் வேறு சின்னத்திற்கு வாக்களிக்கிறார்கள்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும் ஒரு வேட்பாளரின் சின்னத்தை சரியாக அடையாளம் காணமுடியாமல் வேறு சின்னத்திற்கு (அதாவது வேறு வேட்பாளருக்கு) வாக்களித்துவிட்டார்கள் என்று பத்திரிகைகளில் வந்த செய்திகளை நீங்கள் பார்த்திருப்பீர்கள்.

இதற்குத் தீர்வாக வாக்குச்சீட்டின் மாதிரியை பத்திரிகைகளில் பிரசுரித்தால் வாக்காளர்கள் அதனை விளங்கி வாக்களிப்பார்கள் என்ற ஒரு கருத்து உண்டு. ஆனால் நடைமுறையில் உள்ள தேர்தல் சட்டத்தின்படி அவ்வாறு பிரசுரிக்க முடியாது. அதனால் வாக்குச்சீட்டின் மாதிரியைப் போன்றதொரு சீட்டு மூலம் தான் வாக்காளர்களுக்கு இதனை தெளிவுபடுத்த முடியும். இதன்காரணமாக வாக்களிக்கும் முறை பற்றி வேறு வழியில் தெளிவுபடுத்தும் முகமாக இக்கட்டுரை எழுதப்படுகிறது.

வட மாகாணத்தில் இரண்டு தேர்தல் மாவட்டங்கள் உண்டு. ஒன்று யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டம் மற்றையது வன்னி தேர்தல் மாவட்டம். யாழ்ப்பாண தேர்தல் மாவட்டமானது யாழ்ப்பாணம் நிர்வாக மாவட்டத்தையும் கிளிநொச்சி நிர்வாக மாவட்டத்தையும் உள்ளடக்கியது. வன்னி தேர்தல் மாவட்டம் வவுனியா, மன்னார் மற்றும் முல்லைத்தீவு நிர்வாக மாவட்டங்களை உள்ளடக்கியது. முதலாவதாக யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம் பற்றிப் பார்ப்போம்.

### யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம்

யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்திலிருந்து மொத்தமாக ஆறு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட இருக்கின்றனர். ஆறு உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கு ஒவ்வொரு கட்சியும் மற்றும் ஒவ்வொரு சுயேட்சைக் குழுக்களும் ஒன்பது வேட்பாளர்கள் உள்ளடங்கிய ஒரு பட்டியலை வேட்புமனுவுடன் தேர்தல்கள் ஆணையாளருக்கு சமர்ப்பிக்கும்.

இவ் ஆண்டுப் பாராளுமன்றத் தேர்தலுக்கு யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்திலிருந்து 23 அரசியற் கட்சிகளும் 21 சுயேட்சைக் குழுக்களும் போட்டியிடுகின்றன. அதாவது மொத்தமாக 44 குழுக்கள் போட்டியிடுகின்றன. எனவே 44 குழுக்களுக்கும் 44 சின்னங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொன்றிலும் ஒன்பது வேட்பாளர்கள் உள்ளடங்கியிருப்பதால் மொத்தமாக 396 (=44x9) வேட்பாளர்கள் ஆறு ஆசனங்களுக்காகப் போட்டியிடுகின்றனர்.


### யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்ட வாக்குச் சீட்டு மாதிரி பற்றிய ஒரு விளக்கம்

நீங்கள் வாக்குச் சீட்டு மாதிரிப் படத்தை பார்க்கும் போது பின்வருவனவற்றைக் காணலாம். முதலாவதாக அரசியற்கட்சியின் பெயர் / சுயேட்சைக் குழுவின் இலக்கம் இருக்கும் அதனைத் தொடர்ந்து அதே கூட்டுக்குள் அக் கட்சியின்/ அச் சுயேட்சைக் குழுவின் சின்னம் இருக்கும். அதனைத் தொடர்ந்து படத்தில் காட்டியது போன்று சிறிய வெற்றுக் கூடு உள்ளது.

யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்திலிருந்து 23 அரசியற் கட்சிகளும் 21 சுயேட்சைக் குழுக்களும் போட்டியிடுகின்றன. எல்லாமாக 44 குழுக்கள் போட்டியிடுகின்றன. 44 குழுக்கள் போட்டியிடுவதால் வாக்குச் சீட்டின் நீளத்தைக் குறைப்பதற்காக அதன் அகலம் கூட்டப்பட்டு வாக்குச் சீட்டில் இரண்டு நிரல்களில் அரசியற் கட்சிகளினதும் சுயேட்சைக் குழுக்களினதும் பெயர்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு வலது பக்கம் 22 குழுக்களின் பெயர், சின்னம் மற்றும் வாக்களிக்கும் கூடும், இடது பக்கம் 22 குழுக்களின் பெயர், சின்னம் மற்றும் வாக்களிக்கும் கூடும் உள்ளன. இதை நீங்கள் மாதிரி வாக்குச் சீட்டினைப் பார்க்கும் போது (படம் A தரப்பட்டுள்ளது) விளங்கிக் கொள்வீர்கள். உங்கள் புள்ளடி அவ் வெற்றுக்கூட்டுக்குள் தான் இடவேண்டும்.

படம் A யாழ்ப்பாண தேர்தல் மாவட்ட மாதிரி வாக்குச் சீட்டு




அதாவது நீங்கள் கட்சியின் பெயரையும்/சுயேட்சைக் குழுவின் இலக்கத்தையும் அவற்றின் சின்னத்தையும் அல்லது சரியான சின்னத்தை மட்டும் பார்த்து அதற்கு நேராக அருகில் உள்ள வெற்றுக் கூட்டுக்குள் புள்ளடியிடவேண்டும்.

யாழ்ப்பாண தேர்தல் மாவட்ட மாதிரி வாக்குச் சீட்டை (படம் A) ஐப் பார்க்கும் போது உங்களுக்கு இடப்பக்கமாக உள்ள பகுதியில் அரசியல் கட்சியின் பெயர்கள் இருக்கின்றன. அதை தொடர்ந்து அக்கட்சிகளின் சின்னங்கள் இருக்கின்றன. அதன் பின் ஒரு கூடு இருக்கின்றது. அக் கூட்டுக்கு உள்ளேதான் நீங்கள் விரும்பும் கட்சிக்கு புள்ளடி இடவேண்டும். உங்கள் புள்ளடி கூட்டுக்கு வெளியே நீளாதவாறு போடுவதை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.

இதேபோல் வாக்குச் சீட்டினை நீங்கள் பார்க்கும் உங்களது வலது பக்கத்தில் முதலாவதாக ஒரு கட்சியின் பெயர் உள்ளது. (அதாவது யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் 23 அரசியற் கட்சிகள் போட்டியிடுகின்றன. அதில் 22 அரசியற் கட்சிகளின் பெயர் இடது பக்கத்தில் உள்ளது.

எனவே இருபத்து மூன்றாவது கட்சியின் பெயர் வலது பக்கத்தில் இருக்கிறது) மிகுதி எல்லாம் சுயேட்சை குழுக்களின் இலக்கங்களாகும். நீங்கள் சுயேட்சை குழுவுக்கு வாக்களிப்பதாயின் வாக்குச் சீட்டின் வலது பக்கத்தை பார்த்தாலே போதுமானது.

முன்னர் கூறியது போல, வலது பக்கத்திலும் ஒரு கட்சியின் பெயரும் மிகுதி எல்லாம் சுயேட்சை குழுவின் இலக்கங்கள் இருக்கின்றன. அதைத் தொடர்ந்து அவற்றின் சின்னங்கள் இருக்கின்றன. அதன் பின் ஒரு கூடு இருக்கின்றது. அக் கூட்டுக்கு உள்ளேதான் நீங்கள் விரும்பு பவருக்கு புள்ளடி இட வேண்டும். உங்கள் புள்ளடி கூட்டுக்கு வெளியே நீளாதவாறு போடப்படவேண்டும்.

நீங்கள் மேற்கூறியவாறு புள்ளடியிட்டவுடன் நீங்கள் உங்கள் கட்சிக்கு/சுயேட்சைக் குழுவுக்கு வாக்களித்து விட்டீர்கள். இனி நீங்கள் விரும்பும் வேட்பாளருக்கு எவ்வாறு வாக்களிப்பது என்பதைப் பார்ப்போம்.

நீங்கள் கட்சியில்/ சுயேட்சைக் குழுவில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு வாக்களிக்க விரும்பினால் உங்களுக்கு தரப்பட்ட வாக்குச் சீட்டில் கீழே பார்த்தீர்களானால் 1 தொடக்கம் 9 வரை இலக்கமிட்ட பெட்டியிருக்கும். அங்குதான் நீங்கள் வேட்பாளர்களுக்கு வாக்களிக்க வேண்டும்.

(தொடரும்...)

கலாநிதி க. தவலிங்கம்,
ஓய்வுநிலை
நில அளவையாளர் நாயகம்,
தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழில் விபத்து...

துவிச்சக்கரவண்டியில் பயணித்த நபர் ஒருவர் தவறிக் கீழே விழுந்த நிலையில் பின்னால் வந்த தண்ணீர் பவுசர் அவரது காலின் மீது ஏறியுள்ளது.

இதனால் குறித்த நபருக்கு கால் பகுதியில் பலத்த காயம் ஏற்பட்டுள்ளது.

சம்பவ இடத்துக்கு விரைந்த யாழ்ப்பாணம் பொலிஸார் போக்குவரத்தை சீர்செய்ததோடு படுகாயமடைந்த நபரை யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலைக்கு அனுப்பி வைத்தனர். (ந-7)

## முன்பு ஆட்சி...

நுவரெலியாவில் நேற்று நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி அநுர மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில்,

பெருந்தோட்ட மக்களுக்குச் சொந்த நிலம் இல்லை. நிம்மதியான வாழ்வு இல்லை. ஆனால் ஆட்சியாளர்கள் சொகுசாக வாழ்ந்துள்ளனர்.

எனினும் கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது மக்கள் இணைந்து மக்களுக்கான அரசாங்கத்தை உருவாக்கியுள்ளனர்.

எனவே மக்களுக்கான சேவையை நாம் உரிய வகையில் முன்னெடுப்போம்.

நுவரெலியாவில் இனி அரசியல் சண்டித்தனங்களுக்கு இடமில்லை. மக்களை அடக்கி ஆளும் நிலையும் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது தோட்டத் தொழிலாளர்களை ஏமாற்றினார்கள்.

தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரத்து 700 ரூபாய் சம்பளம் வழங்கப்படும் என முன்னாள் ஜனாதிபதி கூறினார்.

ஆனால் இன்னமும் அந்தச் சம்பள உயர்வு வழங்கப்படவில்லை. அவர் வீட்டுக்கும் சென்று விட்டார்.

தோட்டத் தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பள உயர்வைப் பெற்றுக் கொடுப்பதற்கு நாங்கள் நடவடிக்கை எடுப்போம் என்றும் ஜனாதிபதி அநுர அங்கு தெரிவித்தார். (ந-7)

## அரச ஊழியர்...

கரிப்பு மேற்கொள்ளப்படும் என்று ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நுவரெலியாவில் நேற்றையதினம் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கடந்த அரசாங்கத்திடம் பணம் இருந்திருந்தால் அப்போதே அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்பை செய்திருக்க முடியும் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

மேலும், தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கம் இன்னும் மூன்று மாதங்களில் கவிழும் என்று பலரும் கனவு காண்கின்றார்கள்.

இந்த நாட்டைக் கட்டியெழுப்பும் வரை எமது அரசாங்கத்தைக் கவிழ்க்க முடியாது எனவும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க உறுதிபடத் தெரிவித்தார். (ந-7)

## பிரசார நடவடி...

தங்களது பாடசாலையில் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக பெப்ரல் அமைப்புத் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் பாடசாலை அதிபர்கள் அவதானம் செலுத்த வேண்டும் என அந்த அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைத்த அந்த அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி இதனைக் குறிப்பிட்டுள்ளார். (ந-7)

## காயங்களுடன்...

பகுதியில் மீன்பிடித் தொழிலுக்காகச் சென்ற இளைஞனொருவர் முகத்தில் தாக்கப்பட்டு சுயநினைவை இழந்து வீதியில் வீழ்ந்து கிடந்த நிலையில் மீட்கப்பட்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடற்றொழில் நிமித்தம் கண்ணகி நகர் விசுவமடுவில் இருந்து கட்டைக் காட்டுப் பகுதிக்குச் சென்ற இராசலிங்கம் விதுசன் (வயது-23) என்பவரே இவ்வாறு காயங்களுடன் மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மருதங்கேணி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ந-7,60)

## 15 நாடுகளுக்...

இதன்படி இந்தியா, அவுஸ்திரேலியா, இந்தோனேசியா, ஜப்பான், மலேசியா, கென்யா, கியூபா, சீஷெல்ஸ், நேபாளம், மாலைதீவு, பிரித்தானியா, ஈரான், பாகிஸ்தான் மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம் ஆகிய நாடுகளின் உயர்ஸ்தானிகர்கள் மற்றும் தூதுவர்களுக்கு தமது சேவைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகக் கடிதங்கள் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் நியூயோர்க்கில் உள்ள ஐக்கிய நாடுகள் சபைக்கான வதிவிட பிரதிநிதிக்கும் இது தொடர்பான கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. (ந-7)

## வாக்களிப்...

களுக்கு சம்பளம் அல்லது தனிப்பட்ட விடுப்பு இழப்பு இன்றி வாக்களிக்கக் கூடிய வகையில் விடுமுறை வழங்குவது தொடர்பான விதிமுறைகளைத் தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

அதன்படி, அரச துறை அதிகாரிகளின் விசேட விடுமுறை குறித்த நிறுவனங்களின் குறியீடு அத்தியாயம் 12, பத்தி 12/3 இல் கூறப்பட்டுள்ளபடி, பாராளுமன்றத் தேர்தலுக்கு வாக்களிக்கச் செல்வதற்குத் தேவையான ஒரு தொடர்ச்சியான காலம் குறைந்த பட்சம் 4 மணிநேரம் என்றும், சம்பளக் கழிப்பின்றி விசேட விடுமுறை வழங்கப்பட வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அறிவிப்பின் அடிப்படையில் தனியார் துறை ஊழியர்கள் சம்பளம் அல்லது தனிப்பட்ட விடுப்பு இழப்பின்றி வாக்களிக்கும் முறை உருவாக்கப்பட்டுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன்படி, பணியிடத்திலிருந்து வாக்களிப்பு நிலையத்திற்கு 40 கிலோமீற்றர் அல்லது அதற்கும் குறைவான தூரம் இருந்தால் அரை நாள் விடுமுறையும், 40-100 கிலோமீற்றர் வரை இருந்தால் குறைந்தபட்சம் ஒரு நாள் விடுமுறையும் அளிக்க வேண்டும்.

100-150 கிலோமீற்றர் தூரம் என்றால் ஒன்றரை நாட்களும், 150 கிலோமீற்றருக்கு அதிகமாக இருந்தால் 2 நாட்களும் அவகாசம் அளிக்க வேண்டும் எனத் தேர்தல் ஆணைக்குழு கூறியுள்ளது. (ந-7)

## நாட்டில்...

இன்று பிற்பகல் வேளைகளில் இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடிய சாதகமான வளிமண்டல நிலைமை தொடர்ந்தும் காணப்படுகின்றமையால் இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக் கொள்ளத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்களை வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. (ந-7)


மஹஜன சம்பத
திகதி 2024.11.03
சீட்டிழுப்பு இலக்கம் 5645
C 7 4 3 0 3 3
அத சம்பத C 3 0 3 3
சீட்டிழுப்பு இலக்கம் 220
National Lotteries Board

தன நிதானய
திகதி -2024.11.03
சீட்டிழுப்பு இலக்கம் - 1675
D 39 50 65 68 D
32406

மெகா பவர்
திகதி 03/11/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1993
H 26 18 36 41 63
165758

லக்கி 7 VIP
திகதி 2024.11.03
சீட்டிழுப்பு இலக்கம் 0471
Z 1 1 6 1 4 8 Z

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3887
சீட்டிழுப்பு திகதி 03.11.2024
A 01 05 11 24
A 056012

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.11.03
சீட்டிழுப்பு இலக்கம் 954
கடகம் 03 14 29 61 கடகம்
089820 38

உத்தியோகபூர்வ முடிவுகள்
03.11.2024 வெற்றி வாரம் 0353
K 9 2 4 8 6 7
81640
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.24,930,436.00
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2619
சீட்டிழுப்பு திகதி 2024.11.03
தினம் ஞாயிற்றுக்கிழமை
19 54 64 73 S
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.66,615,453.60
DLB

சனிதா
திகதி 03.11.2024 வெற்றி வாரம் 4780
14 15 19 28 S
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 56,128,798.00
06846
DLB

சசிரி
வெற்றி வாரம் 550
சீட்டிழுப்பு திகதி 03.11.2024
ஞாயிற்றுக்கிழமை
01 06 41
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.200,000.00
DLB

சீட்டிழுப்பு வாரம் 4331
சீட்டிழுப்பு திகதி 03.11.2024
தினம் ஞாயிற்றுக்கிழமை
25 45 50 53
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,176,082.00
103421
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
X 26 36 45 52 69
1795
03.11.2024
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.554,156,506.20
DLB

ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம் : 2445
சீட்டிழுப்பு திகதி : 2024.11.03
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.79,492,117.60
ADA KOTIPATHI
13 16 28 39 0
543335
DLB


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அச்சுவேலி கைத்தொழில் பேட்டை அபிவிருத்தி
மொத்த பயனாளிகள்
1500

வீதி புனரமைப்பு
மொத்த திட்டங்கள்
180
321+ KM

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டம்
மொத்த பயனாளிகள்
2005
மொத்த நிதி ஒதுக்கீடு
ரூ 30,000,000

என்கனவு யாழ்
இருப்பியல்
வையத் தலைமை கொள்

X 1

வீட்டுத்திட்டம்
மொத்த திட்டங்கள்
3488
மொத்த நிதி ஒதுக்கீடு
ரூ 2,733,600,000

சுயதொழில்
மொத்த திட்டங்கள்
7289

மின் இணைப்பு
மொத்த பயனாளிகள்
2005
மொத்த நிதி ஒதுக்கீடு
ரூ 45,000,000

மலசலகூடம்
மொத்த பயனாளிகள்
914
மொத்த நிதி ஒதுக்கீடு
ரூ 65,500,000

கோவில் புனரமைப்பு
மொத்த திட்டங்கள்
60
மொத்த நிதி ஒதுக்கீடு
ரூ 45,000,000

(C-093)

மொத்த நிதி ஒதுக்கீடு
ரூ 4,553,308,077



மொத்த திட்டங்கள்
20,268 +

3 மில்லியன் வேலைத்திட்டம்
மொத்த திட்டங்கள்
508
மொத்த நிதி ஒதுக்கீடு
ரூ 272,704,000

உற்பத்தி கிராமங்கள்
மொத்த நிதி ஒதுக்கீடு
ரூ 100,000,000

குளங்கள் புனரமைப்பு
மொத்த நிதி ஒதுக்கீடு
ரூ 38,700,000

பலாலி விமான நிலைய
400 மீற்றர் வீதி விடுவிப்பு

பற்றிக் பயிற்சி நிலையம்
மொத்த பயனாளிகள்
500
மொத்த நிதி ஒதுக்கீடு
ரூ 93,750,000

கிராமிய கைத்தொழில் ஊக்குவிப்பு
மொத்த பயனாளிகள்
424

சப்ரிகம (நிறைவான கிராமம்)
மொத்த திட்டங்கள்
793
மொத்த நிதி ஒதுக்கீடு
ரூ 864,787,864

தபால்பெட்டி
சின்னத்திற்கு வாக்களிப்பீர்

ප්‍රජාතන්ත්‍රවාදී ජාතික සන්ධානය
ஜனநாயக தேசிய கூட்டணி
Democratic National Alliance

X 1



வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-1516) 076 825 7716 (ஆகாஸ்)


# துன்ஹிந்த பஸ் போல நாடு விபத்தில் சிக்கும் ரணில் எச்சரிக்கை

(கொழும்பு)



அனுபவம் வாய்ந்தவர்களை பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யாவிடின் துன்ஹிந்த - பதுளை வீதியில் கவிழ்ந்த கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக பஸ் போன்று நாடு விபத்துக்குள்ளாகும் என முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஆர்கேட் சுதந்திர சதுக்கத்தில் நடைபெற்ற மாநாட்டின் போது கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (ந-7)

# வேட்பாளருக்கு கொலை மிரட்டல்

(முள்ளியவளை)

பாராளுமன்றத் தேர்தலில் வன்னித் தேர்தல் மாவட்டத்தில் மாட்டு வண்டிச் சின்னத்தில் போட்டியிடும் தமிழர் மரபுரிமைக் கட்சியின் முதன்மை வேட்பாளர் நேசராசா சங்கீதன் என்பவருக்கு நேற்று மாலை கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளதாக முள்ளியவளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த வேட்பாளருக்கு ஐக்கிய மக்கள் சக்தியின் வன்னித் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவருடைய உறவினர் மற்றும் ஆதரவாளரால் தொலைபேசியில் அழைப்பை ஏற்படுத்தி மேற்படி அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த விடயம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை முள்ளியவளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ந-7,299)


## மணப்பெண் தேவை

- சுண்டிக்குழி, இந்து, கௌரவ குடும்பம், 1987, திருவோணம், BA(Hons), Business Management, CIMA, UK citizen Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- குப்பிளான் - கொக்குவில், இந்து கௌரவ குடும்பம், 1990, கேட்டை, Phd, Director, Canada மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- நெல்லியடி, இந்து, கௌரவ குடும்பம், 1991, பூராடம், HND (Jaffna university), USA, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- வேலணை, இந்து கௌரவ குடும்பம், 1989, கேட்டை, Civil Engineer (Moratuwa University) Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- காரைநகர் - கோப்பாய், இந்து, கௌரவ குடும்பம், 1992, பூரம், Bsc Engineering canada மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- நீர்வேலி, இந்து, கௌரவ குடும்பம், 1989, சுவாதி, Phd, South korea மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- யாழ்ப்பாணம், இந்து, கௌரவ குடும்பம், 1986, மகம், BSc, Msc UK citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- புலோலி, இந்து, கௌரவ குடும்பம், 1982, சுவாதி, Bsc in Engineering(UK), Australia, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- கரவெட்டி - புங்குடுதீவு, இந்து, கௌரவ குடும்பம், 1989, மிருகசீரிடம், Bsc, UK citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.

(2555)

www.thaalee.com திருமண சேவை - 077 539 3728 - 077 803 8193



## யாழ்ப்பாணம் - சென்னை விமான சேவைகள்

யாழ் - சென்னை விமானப் பயணச் சீட்டுகள் 38,500/= இலிருந்து விசேட விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். ஒரு வருட E-Visa இனை 10,000/= ரூபாவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். (516)

APEX TRAVELS
0777 597 598, 076 3333 644
இல.105/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். CTB பஸ் தரிப்பிடத்திற்கு அருகில்)



நீங்களும் விரைவில் அமெரிக்காவில். இன்னும் 2 நாட்களில் பதிவுகள் நிறைவடைகின்றன
அமெரிக்க அதிஸ்ட விசா (07-11-2024 வியாழக்கிழமை)
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்
காத்திருக்காமல் உடனே பதியுங்கள்
55000 இலவச விசாக்கள்
0768226244
V2 Travels
0777469777 | 0743900350 | 0743900352 | 0768226237 | 0743900353 | 0743900351
0764550673 | 0768226240 | 0768226243 | 0777068777 | 0777720322 | 0764550675
0768226242 | 0768226238 | 0777726322 | 0764550674 | 0764550670 | 0777718322
0764550671 | 0776699892 | 0768226236 | 0768226230 | 0776697960



## வீடு வாடகைக்கு தேவை

நல்லூர் கந்தசாமி கோவிலை அண்டிய பகுதியில் 3 பரப்புக் காணியில் 3 அல்லது 4 அறைகளைக் கொண்ட வீடு ஒன்று தேவை. (C-1515)

077 666 0440



## தோட்டக்காணியுடன் வீடு வாடகைக்கு உண்டு

யாழ்ப்பாணம் நவக்கிரிப் பகுதியில் தோட்டக் காணியுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. (C-1518)

077 327 6363


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.11.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.